
# லெனின்

## ர்வாதிகாரப் பிரச்சினையின் வரலாற்றைப் பற்றி



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

5 MAR 1985
LIBRARY
MADRAS

# வி. இ. லெனின்

# சர்வாதிகாரப் பிரச்சினையின் வரலாற்றைப் பற்றி

(குறிப்பு)

REFERENCE

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

R O P 75

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன், எம். ஏ.

இந்த நூல் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியைச் சேர்ந்த மார்க்சிய-லெனினியக் கழகத்தார் தயாரித்த வி. இ. லெனின், நூல் திரட்டு, 5வது பதிப்பின் 41வது தொகுதியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1983

Л $\frac{0101020000—562}{014(01)—83}$ 369—83

-5 MAR 1985
MADRAS

எந்த விதிவிலக்குமில்லாமல் எல்லா முதலாளித்துவ நாடுகளிலுமுள்ள நவீனத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையே அடிப்படைப் பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு அதன் வரலாற்றைப் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும். சர்வதேச அளவில், பொதுவாக புரட்சிகரமான சர்வாதிகாரம், குறிப்பாக பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் ஆகிய போதனையின் வரலாறு புரட்சிகரமான சோஷலிசத்தின், குறிப்பாக மார்க்சியத்தின் வரலாற்றோடு பொருந்தி வருகிறது. மேலும் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட வர்க்கங்கள் தங்களைச் சுரண்டியவர்களுக்கு எதிராக நடத்திய எல்லாப் புரட்சிகளின் வரலாறும் சர்வாதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையில் நம்முடைய அறிவுக்கு ஆதாரப் பொருளையும் தோற்றுவாயையும் பிரதானமாகக் கொடுக்கிறது; இதுவே எல்லாவற்றையும் காட்டிலும் மிக முக்கியமானதாகும். எந்தப் புரட்சிகரமான வர்க்கத்தின் வெற்றிக்கும் சர்வாதிகாரம் அவசியமென்பதை யாராவது புரிந்து கொள்ளவில்லை என்றால் அவருக்குப் புரட்சிகளின் வரலாற்றைப் பற்றி ஒன்றும் தெரியாது, அல்லது இந்தத் துறையில் அவர் எதையும் தெரிந்துகொள்ள விரும்பவில்லை.

ருஷ்யாவைப் பொறுத்தவரையிலும் தத்துவம் சம்பந்தப்பட்ட அளவில் 1902-03ம் வருடங்களில் ஸார்யா மற்றும் இஸ்க்ராவின்[1] ஆசிரியர் குழுவினால் தயாரிக்கப்பட்ட அல்லது இன்னும் துல்லியமாகச் சொல்வதென்றால் கி. பிளெ

ஹானவினுல் தயாரிக்கப்பட்டு அந்த ஆசிரியர் குழுவினுல் ஒழுங்குபடுத்தப்பட்டு திருத்தப்பட்டு அங்கீகாரம் செய்யப் பட்ட ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி யின் வேலைத்திட்டம்[2] விசேஷமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இந்த வேலைத்திட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைப் பற்றிய பிரச்சினை தெளி வான, திட்டவட்டமான சொற்களில் எடுத்துரைக்கப் பட்டிருக்கிறது; மேலும் பெர்ன்ஷ்டைனுக்கு, சந்தர்ப்ப வாதத்துக்கு எதிரான போராட்டத்தோடு அது இணைக்கப் பட்டிருக்கிறது. எனினும் எல்லாவற்றுக்கும் மேலாகப் புரட்சியின் அனுபவம், அதாவது ருஷ்யாவைப் பொறுத்த வரை 1905ம் வருடத்தின் அனுபவம்[3] முக்கியமானதாகும்.

அந்த வருடத்தின் கடைசி மூன்று மாதங்கள்—அக் டோபர், நவம்பர், டிசம்பர் ஆகியவை—குறிப்பிடத்தக்க வகையில் வேகமான, விரிவான வெகுஜனப் புரட்சிப் போராட்டக் காலகட்டமாகும். அந்தப் போராட்டத் தில் வெகுஜன அரசியல் வேலைநிறுத்தம், ஆயுதந்தாங்கிய எழுச்சி என்னும் மிகச் சக்தி வாய்ந்த இரண்டு முறைகளும் இணைந்திருப்பதை அந்தக் காலகட்டம் கண்டது. (இதற்கு வெகு காலத்துக்கு முன்பாகவே, 1905 மே மாதத்திலேயே போல்ஷிவிக் காங்கிரஸ், ''ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழி லாளர் கட்சியின் மூன்ருவது காங்கிரஸ்'' ''ஆயுதந்தாங் கிய எழுச்சியின் மூலம் சர்வாதிகாரத்துக்கு எதிரான நேரடியான போராட்டத்துக்கு பாட்டாளி வர்க்கத்தை ஸ்தாபனரீதியாகத் திரட்டுகின்ற கடமை'' ''கட்சியின் மிகப் பெரிய, மிக முக்கியமான கடமைகளில் ஒன்று'' என்று அறிவித்தது, ''ஆயுதந்தாங்கிய எழுச்சியின் தொடக்கத்தி லும் அதன் முன்னேற்றத்தின் போதும் மாபெரும் முக்கியத் துவத்தைக் கொண்டிருக்கக் கூடிய வெகுஜன அரசியல் வேலைநிறுத்தங்களின் பாத்திரத்தை விளக்கிக் கூறுமாறு''[4] எல்லாக் கட்சி ஸ்தாபனங்களுக்கும் உத்தரவிட்டது என் பதை இங்கே குறித்துக் கொள்வோம்.)

உலக வரலாற்றிலேயே முதல் முறையாக, புரட்சிகர மான போராட்டம் மிக உயர்ந்த வளர்ச்சிக் கட்டத்தை எட்டி மிக அதிகமான உத்வேகத்தைப் பெற்றபடியால் ஆயுதந்தாங்கிய எழுச்சியானது பிரத்யேகமான பாட்டாளி

வர்க்க ஆயுதமாகிய வெகுஜன வேலைநிறுத்தத்தோடு இணைக்கப்பட்டது. இந்த அனுபவம் எல்லா பாட்டாளி வர்க்கப் புரட்சிகளுக்குமே உலக ரீதியான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பது தெளிவாகும். அதன் அரசியல், பொருளாதார அம்சங்கள் ஆகிய இரண்டையுமே போல்ஷிவிக்குகள் மிக அதிகமான கவனத்தோடும் கடுமையான உழைப்போடும் ஆராய்ந்தார்கள். 1905ம் வருடத்தில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான வேலைநிறுத்தங்களின் மாதவாரியான புள்ளிவிவரங்களைக் கொண்டு அவற்றுக்கிடையே உள்ள உறவுகளையும் உலக வரலாற்றிலேயே முதல் தடவையாக வேலைநிறுத்தப் போராட்டங்கள் அடைந்த வளர்ச்சித் தரத்தையும் பற்றிய ஆராய்ச்சியை நான் குறிப்பிடுகிறேன். இந்த ஆராய்ச்சியை நான் 1910 அல்லது 1911ம் வருடத்தில் **புரோஸ்வெஷேனியே**[5] இதழில் வெளியிட்டேன்; அப்பொழுது வெளிநாடுகளிலிருந்து வெளியிடப்பட்ட போல்ஷிவிக் பத்திரிகைகளில் அதன் சுருக்கம் வெளியாயிற்று.[6]

வெகுஜன வேலைநிறுத்தங்களும் ஆயுதந்தாங்கிய எழுச்சிகளும் புரட்சிகரமான ஆட்சியதிகாரத்தையும் சர்வாதிகாரத்தையும் பற்றிய பிரச்சினையை இயற்கையாகவே எழுப்பின. ஏனென்றால் இத்தகைய போராட்ட வடிவங்கள் தவிர்க்க முடியாத வகையில்—முதலில் ஸ்தல மட்டத்தில்—பழைய ஆட்சி அதிகாரிகளை வெளியேற்றுவதற்கும் பாட்டாளி வர்க்கம் மற்றும் இதர புரட்சிகரமான வர்க்கங்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் நிலவுடைமையாளர்களை விரட்டுவதற்கும், சில சமயங்களில் தொழிற்சாலைகளைக் கைப்பற்றுவதற்கும் இன்னும் இதரவைகளுக்கும் இட்டுச் சென்றன. அப்பொழுது ஏற்பட்ட வெகுஜனப் புரட்சிகரமான போராட்டம் **தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகள்**, அதனைத் தொடர்ந்து படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகள், விவசாயிகள் கமிட்டிகள் இன்னும் இதர அமைப்புக்களை, உலக வரலாறு இதற்கு முன்பு அறிந்திராத அமைப்புக்களைத் தோற்றுவித்தது. ஆகவே இன்று உலக முழுவதிலும் வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும் அடிப்படையான பிரச்சினைகள் (சோவியத் ஆட்சியதிகாரம் மற்றும்

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்) செய்முறை வடிவத்தில் 1905ம் வருடக் கடைசியிலேயே முன்வைக்கப்பட்டன. புரட்சிகரமான பாட்டாளி வர்க்கம் மற்றும் போலித்தனம் அல்லாத மார்க்சியத்தின் மிகச் சிறந்த பிரதிநிதிகளான ரோஸா லுக்சம்பர்க் போன்றவர்கள் இந்தச் செய்முறை அனுபவத்தின் முக்கியத்துவத்தை உடனடியாக உணர்ந்தார்கள், பொதுக் கூட்டங்களிலும் பத்திரிகைகளிலும் அதைப் பற்றி விமர்சன ஆய்வு செய்தார்கள் என்ற போதிலும் அதிகார பூர்வமான சமூக-ஜனநாயக மற்றும் சோஷலிஸ்ட் கட்சிகளின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளில் அதிகமான பெரும்பான்மையினர் (சீர்திருத்தவாதிகள் மற்றும் எதிர்காலத்தில் ''காவுத்ஸ்கிவாதிகளும்'' ''லொங்கேவாதிகளும்''[7] அமெரிக்காவில் ஹில்குவிட்டைப் பின்பற்றுவோரும் இதரர் ஆகிய இருதரப்பினரும் இதில் அடங்குவர்) இந்த அனுபவத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளவும் புரட்சியாளர்கள் என்ற முறையில் தங்களுடைய கடமையை நிறைவேற்றுவதற்கும், அதாவது இந்த அனுபவத்தின் படிப்பினைகளை ஆராய்வதற்கும் பரப்புவதற்கும் முற்றிலும் தகுதியற்றவர்களாகத் தங்களை நிரூபித்துக் கொண்டார்கள்.

ருஷ்யாவில் 1905 டிசம்பரில் ஆயுதந்தாங்கிய எழுச்சி[8] முறியடிக்கப்பட்டவுடனே போல்ஷிவிக்குகள், மென்ஷிவிக்குகள்[9] ஆகிய இருவருமே இந்த அனுபவத்தைத் தொகுத்துரைக்கும் பணியில் ஈடுபட்டார்கள். 1906 ஏப்ரல் மாதத்தில் ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற ''ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஒற்றுமை காங்கிரஸ்'' என்று அழைக்கப்பட்ட காங்கிரசினால்—அதில் மென்ஷிவிக்குகள், போல்ஷிவிக்குகள் ஆகிய இருவருமே பிரதிநிதித்துவம் கொண்டு சம்பிரதாயமான முறையில் ஒன்று சேர்ந்து கலந்து கொண்டார்கள்—இந்த வேலை விசேஷமான முறையில் விரைவுபடுத்தப்பட்டது. இந்தக் காங்கிரசுக்கு இரண்டு குழுவினருமே மிகச் சுறுசுறுப்பான தயாரிப்புகளைச் செய்தார்கள். காங்கிரசுக்கு முன்பாக, 1906ம் வருட ஆரம்பத்தில் இரு குழுவினரும் மிக முக்கியமான எல்லாப் பிரச்சினைகளையும் பற்றித் தங்களுடைய நகல் தீர்மானங்களை வெளியிட்டார்கள். இந்தப் பிரச்சினை அந்த சமயத்தில் எந்த நிலையிலிருந்தது என்பதை ஆராய்வதற்கு இந்த நகல் தீர்

மானங்கள் மிகவும் முக்கியமான பொருளாக இருக்கின்றன. நான் எழுதிய ரு. ச. ஜ. தொ. கட்சியின் ஒற்றுமை காங்கிரசைப் பற்றிய அறிக்கை (செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களுக்கு ஒரு கடிதம்) (மாஸ்கோ, 1906, 110 பக்கங்கள்—இரு குழுவினருடைய நகல் தீர்மானங்களும் காங்கிரசின் முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் இப்பிரசுரத்தில் சுமார் பாதி பக்கங்களை எடுத்துக் கொள்கின்றன) என்ற பிரசுரத்தில் இவை மறுபதிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன.

சோவியத்துகளின் முக்கியத்துவத்தைப் பற்றிய விவாதங்கள் அந்த சமயத்திலேயே சர்வாதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையோடு இணைக்கப்பட்டிருந்தன. போல்ஷிவிக்குகள் 1905 அக்டோபர் புரட்சிக்கு[10] முன்பே சர்வாதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள் (ஜனநாயகப் புரட்சியில் சமூக-ஜனநாயகத்தின் இரண்டு போர்த் தந்திரங்கள் என்ற தலைப்பில் ஜெனிவா, ஜூலை, 1905ல் நான் எழுதிய பிரசுரத்தைப் பாருங்கள், பன்னிரண்டு வருடங்கள் என்ற கட்டுரைத் தொகுப்பு நூலில் இது மறு பதிப்புச் செய்யப்பட்டது). ''சர்வாதிகாரம்'' பற்றிய கோஷம் சம்பந்தமாக மென்ஷிவிக்குகள் எதிர் முறையான நிலையெடுத்தார்கள். தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகள் ''உண்மையில் புதிய புரட்சிகரமான ஆட்சியதிகாரத்தின் கருவடிவம்'' என்று போல்ஷிவிக்குகள் வலியுறுத்தினார்கள். போல்ஷிவிக்குகளின் நகல் தீர்மானத்தில் இப்படியே சொல்லப்பட்டிருக்கிறது (என்னுடைய அறிக்கையில் பக்கம் 92ஐப் பார்க்கவும்). மென்ஷிவிக்குகள் சோவியத்துகளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தார்கள், அவற்றை ''அமைப்பதற்கு உதவி செய்வதற்கு'' அவர்கள் ஆதரவாக இருந்தார்கள், இதரவை; ஆனால் அவை புரட்சிகரமான ஆட்சியதிகாரத்தின் கருவடிவம் என்று அவர்கள் கருதவில்லை, பொதுவில் இந்த அல்லது இந்த மாதிரியான வேறு ''புதிய, புரட்சிகரமான ஆட்சியதிகாரத்தைப்'' பற்றி ஒன்றும் சொல்லவில்லை, சர்வாதிகாரக் கோஷத்தை முற்றிலும் நிராகரித்தார்கள். இந்தப் பிரச்சினை சம்பந்தமான இந்த அணுகுமுறை இன்று மென்ஷிவிக்குகளோடு நமக்குள்ள எல்லாக் கருத்து வேறுபாடுகளின்

விதைகளையும் முன்பே கொண்டிருந்ததை சுலபமாகக் காணலாம். இந்தப் பிரச்சினை சம்பந்தமான அவர்களுடைய அணுகுமுறையில் மென்ஷிவிக்குகள் (ருஷ்ய மென்ஷிவிக்கு கள், காவுத்ஸ்கிவாதிகள், லொங்கேவாதிகள் மற்றும் அவர் களைப் போன்ற ருஷ்யர் அல்லாத மென்ஷிவிக்குகள் ஆகிய இருவருமே) பாட்டாளி வர்க்கப் புரட்சியைச் சொல்லள வில் அங்கீகரித்துக் கொண்டு புரட்சி என்ற கருதுகோளுக்கு மிகவும் அவசியமான, அடிப்படையானவற்றைச் செயலில் நிராகரிக்கின்ற சீர்திருத்தவாதிகள் அல்லது சந்தர்ப்பவாதி களைப் போல நடந்துகொண்டார்கள், நடந்துகொள்கிறார் கள் என்பதையும் சுலபமாகக் காணலாம்.

1905ம் வருடப் புரட்சிக்கு முன்பே முன்னர் குறிப்பிடப் பட்ட இரண்டு போர்த்தந்திரங்கள் என்ற பிரசுரத்தில் '' 'புரட்சிக்கு' பதிலாக 'சர்வாதிகாரத்தை' யாரும் உணர முடியாத வகையில் ஏற்படுத்துவதாக'' என்மீது மென்ஷி விக்குகள் சுமத்திய குற்றச்சாட்டின் வாதங்களை நான் விவாதித்தேன் (பன்னிரண்டு வருடங்கள், பக்கம் 459). இந்தக் குற்றச்சாட்டே மென்ஷிவிக்குகளின் சந்தர்ப்பவாதத்தை, மிதவாத முதலாளி வர்க்கத்தினரின் எடுபிடிகள், பாட்டாளி வர்க்க அணிகளில் அதன் செல்வாக்கை ஏற்படுத்துபவர்கள் என்ற முறையில் அவர்களுடைய உண்மையான அரசியல் தன்மையை வெளிப்படுத்துகிறது என்பதை நான் விவரங் களோடு எடுத்துக் காட்டினேன். புரட்சி மறுக்கப்பட முடியாத சக்தியாக வளர்ச்சியடைகின்றபொழுது அதன் எதிரிகள்கூட ''புரட்சியை அங்கீகரிக்கத்'' தொடங்குகிறார் கள் என்று நான் எழுதினேன்; அரசியலமைப்புச்சட்ட முடி யாட்சிவாதிகளாக இருந்த ருஷ்ய மிதவாதிகளின் உதார ணத்தை (1905ம் வருடத்தின் கோடை காலத்தில்) நான் சுட்டிக்காட்டினேன். இப்பொழுது, 1920ல் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் உள்ள மிதவாத முதலாளி வர்க்கத்தினர்—அல்லது அவர்களில் அதிகமாகக் கல்வி கற்ற, சாதுரியமடைந் தவர்கள்—''புரட்சியை அங்கீகரிப்பதற்குத்'' தயாராக இருக்கிறார்கள் என்பதையும் சேர்த்துக் கூறலாம். ஆனால் புரட்சியை ''அங்கீகரித்து'' அதே சமயத்தில் திட்டவட்ட மான வர்க்கத்தின் (அல்லது திட்டவட்டமான வர்க்கங்

களின்) சர்வாதிகாரத்தை அங்கீகரிக்க மறுப்பதன் மூலம் அந்தக் காலத்திய ருஷ்யாவின் மிதவாதிகளும் மென்ஷிவிக்குகளும், இன்றைய ஜெர்மன் மற்றும் இத்தாலிய மிதவாதிகளும் டுராட்டியவாதிகளும் காவுத்ஸ்கிவாதிகளும் தங்களுடைய சீர்திருத்தவாதத்தை, புரட்சியாளர்களாக இருப்பதற்குத் தங்களுடைய முழுமையான தகுதியற்ற தன்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

புரட்சி முன்பே மறுக்கப்பட முடியாத சக்தியாகிவிட்ட பொழுது, ''மிதவாதிகள்'' கூட அதை அங்கீகரிக்கும் பொழுது, ஒடுக்கப்பட்டிருக்கின்ற பெருந்திரளான மக்களின் வெல்லமுடியாத பலத்தை ஆளும் வர்க்கத்தினர் பார்ப்பதோடு மட்டுமல்லாமல் உணரவும் முடிகின்ற பொழுது, அப்பொழுது மொத்தக் கேள்வியுமே—தத்துவாசிரியர்கள், செய்முறைக் கொள்கையின் தலைவர்கள் ஆகிய இருவருக்குமே—புரட்சியைப் பற்றித் துல்லியமான வர்க்கரீதியான வரையறுப்பாகத் தன்னை வகைப்படுத்திக் கொள்கிறது. எனினும் ''சர்வாதிகாரத்தைப்'' பற்றிய கருதுகோள் இல்லாமல், இந்தத் துல்லியமான வர்க்க வரையறுப்பைக் கொடுக்க முடியாது. சர்வாதிகாரத்துக்குத் தயாரிப்புச் செய்தாலொழிய உண்மையில் புரட்சிக்காரராக இருக்க முடியாது. இந்த உண்மையை மென்ஷிவிக்குகள் 1905ல் புரிந்து கொள்ளவில்லை; 1920ல் கம்யூனிஸ்டு அகிலத்தின்[11] ''கடுமையான'' நிபந்தனைகளைக் கண்டு அஞ்சுகின்ற இத்தாலிய, ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் இதர சோஷலிஸ்டுகள் இதைப் புரிந்து கொள்ளவில்லை; சர்வாதிகாரத்தைச் சொல்லளவில் அங்கீகரிக்கக் கூடியவர்கள், ஆனால் செயலில் அதற்குத் தயாரிப்புச் செய்ய முடியாதவர்கள் இந்த உண்மையைக் கண்டு அஞ்சுகிறார்கள். ஆகவே மார்க்சின் கருத்துக்களைப் பற்றிய விளக்கத்தை விரிவான முறையில் இங்கே மேற்கோள் காட்டுவது பொருத்தமானதே. 1905 ஜூலையில் ருஷ்ய மென்ஷிவிக்குகளுக்கு எதிராக நான் இதை வெளியிட்டேன்; 1920ல் மேற்கு ஐரோப்பாவின் மென்ஷிவிக்குகளுக்கும் இது அதே அளவுக்குப் பொருந்துவதே (பத்திரிகைகளின் பெயர்களைத் தருவது, இதரவைகளுக்குப் பதிலாக குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் மென்ஷிவிக்குகளா

அல்லது போல்ஷிவிக்குகளா என்பதை மட்டும் சுட்டிக் காட்டுவேன்):

''1848ம் வருடத்தில் புதிய ரைன் பத்திரிகையில்[12] மார்க்ஸ் எழுதிய கட்டுரைகளுக்குத் தன்னுடைய குறிப்புகளில், 'ஜனநாயகத்தை அடைவதற்கு ஒரே வழியாக சர்வாதிகாரத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும்' என்று அந்தப் பத்திரிகை கோரியதாகச் சொல்லப்பட்டது முதலாளித்துவப் பத்திரிகைகள் அதன் மீது சுமத்திய கண்டனங்களில் ஒன்று என்று மெரிங் கூறுகிறார் (Marx' Nachlass,* மூன்றும் தொகுதி, பக்கம் 53). கொச்சையான முதலாளித்துவக் கருத்தோட்டத்தின் படி சர்வாதிகாரம், ஜனநாயகம் என்ற சொற்கள் ஒன்றுக்கொன்று எதிரானவை. வர்க்கப் போராட்டத் தத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியாமல், அரசியல் களத்தில் பல்வேறு முதலாளித்துவக் குழுக்கள், கோஷ்டிகளின் அற்பத்தனமான சச்சரவுகளையே பார்த்து அனுபவப்பட்ட முதலாளித்துவ வர்க்கத்தினர் சர்வாதிகாரம் என்றதுமே ஜனநாயகத்தின் உரிமைகள், உத்தரவாதங்கள் ரத்துச் செய்யப்படுவதையும் ஒரு சர்வாதிகாரியின் தனிப்பட்ட நலனுக்காக எல்லா வகையான சர்வாதிகாரங்களும் அதிகாரத்தைத் தவறுகப் பயன்படுத்தும் எல்லா வகையான அத்துமீறல்களையுமே புரிந்து கொள்கின்றனர். உண்மையில் இந்தக் கொச்சையான முதலாளித்துவக் கருத்தையே நமது மென்ஷிவிக்குகளிடம் பார்க்கிறோம். 'லெனின் தன்னுடைய அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்க மிகவும் அதிகமான ஆசை கொண்டிருப்பதே' போல்ஷிவிக்குகள் 'சர்வாதிகார' கோஷத்தின் மீது பற்றுக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்று அவர்கள் எழுதுகிறார்கள் (இஸ்க்ரா, எண் 103, பக்கம் 3, பத்தி 2). வர்க்க சர்வாதிகாரம் தனிப்பட்ட சர்வாதிகாரத்திலிருந்து வேறுபட்டிருப்பதை, சோஷலிஸ்ட் சர்வாதிகாரத்திலிருந்து வேறுபட்டதான ஜனநாயக சர்வாதிகாரத்தின் கடமைகளை மென்ஷிவிக்குகளுக்கு விளக்கிக் கூறுவதற்காக புதிய ரைன் பத்திரிகையின் கருத்துக்களை எடுத்துரைப்பது தவறல்ல.

---

* மார்க்ஸ், இலக்கிய மரபுரிமை.—ப-ர்.

"'ஒரு புரட்சிக்குப் பிறகு, அரசின் ஒவ்வொரு தற்காலிகமான ஸ்தாபனத்துக்கும் சர்வாதிகாரம் அவசியம்; அது சுறுசுறுப்பான சர்வாதிகாரமாகவும் இருக்க வேண்டும். சர்வாதிகார ரீதியில் நடவடிக்கைகளைச் செய்யாததற்காக, பழைய அமைப்புக்களின் எச்சங்களை உடனடியாக நொறுக்கி அகற்றாமலிருந்ததற்காக ஆரம்பத்திலிருந்தே நாம் காம்ப்ஹாவுஸனைக் (1848 மார்ச் 18க்குப் பிறகு அமைச்சரவையின் தலைவர்) குறை கூறியிருக்கிறோம். திரு. காம்ப்ஹாவுஸன் அரசியலமைப்புச் சட்ட பிரமைகளில் சொக்கிப் போயிருந்த பொழுது தோல்வியடைந்த கட்சி (அதாவது பிற்போக்குக் கட்சி) அதிகாரவர்க்கத்திலும் இராணுவத்திலும் தன்னுடைய நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டது; அங்குமிங்கும் பகிரங்கமான போராட்டத்துக்குக்கூடத் துணிந்தது' என்று புதிய ரைன் பத்திரிகை 1848 செப்டெம்பர் 14ந் தேதியன்று எழுதியது.[13]

"புதிய ரைன் பத்திரிகையில் காம்ப்ஹாவுஸன் அமைச்சரவையைப் பற்றி வெளிவந்த நீண்ட கட்டுரைகளில் விரிவான முறையில் எழுதப்பட்டவற்றை இந்த வார்த்தைகள் சில கருதுகோள்களில் தொகுத்துக் கூறுகின்றன என்று மெரிங் பொருத்தமாகச் சொல்கிறார். மார்க்சினுடைய இந்த வார்த்தைகள் நமக்குத் தெரிவிப்பது என்ன? ஒரு தற்காலிகமான புரட்சிகர அரசாங்கம் சர்வாதிகார ரீதியில் செயலாற்ற வேண்டும்(மென்ஷிவிக்குகள் சர்வாதிகார கோஷத்தைச் சொல்ல வெட்கப்பட்டபடியால் இந்தக் கருதுகோளை அவர்களால் சிறிதும் புரிந்துகொள்ள முடியவில்லை); அத்தகைய ஒரு சர்வாதிகாரத்தின் கடமை பழைய ஸ்தாபனங்களின் எச்சங்களை அழிப்பதே (ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) மூன்றாவது காங்கிரசின் எதிர்ப்புரட்சிக்கு எதிரான போராட்டத்தைப் பற்றிய தீர்மானம் தெளிவாக எடுத்துச் சொன்னது துல்லியமாக இதைத்தான்; நாம் மேலே எடுத்துக் காட்டியது போல மென்ஷிவிக்குகளின் தீர்மானத்தில் இது இடம் பெறவில்லை); மூன்றாவதாகவும் கடைசியாகவும், புரட்சி மற்றும் பகிரங்கமான உள்நாட்டு யுத்தக் காலகட்டத்தில் 'அரசியலமைப்புச் சட்ட பிரமைகளைக்' கொண்டிருந்ததற்காக முதலாளித்துவ ஜனநாயகவாதிகளை மார்க்ஸ் கண்டனம்

செய்தார் என்பது இந்த வார்த்தைகளிலிருந்து பெறப் படும். 1848 ஜூன் 6ந் தேதியன்று புதிய ரைன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையில் இந்த வார்த்தைகளின் அர்த்தம் இன்னும் குறிப்பிடத்தக்க வகையில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

'' 'எல்லாவற்றுக்கும் முதலில் தேசிய அரசியலமைப்புச் சட்ட சபை சுறுசுறுப்புடைய, புரட்சிகரமான சுறுசுறுப் புடைய சபையாக இருக்க வேண்டும். ஆனால் ஃபிராங்க்பர்ட் மாநாடு[14] அரசாங்கத்தை இயங்க அனுமதித்துவிட்டு நாடாளுமன்றவாதத்தின் பள்ளிக்கூட பாணியிலமைந்த முயற்சிகளில் அதிகமான கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக் கிறது. இந்த அறிவார்ந்த சபை நன்கு சீர்தூக்கிப் பார்த்து மிகச் சிறந்த செயல்திட்டத்தையும் மிகச் சிறந்த அரசிய லமைப்பையும் உருவாக்குவதில் வெற்றியடைகிறது என்று அனுமானிப்போம்; ஆனால் இதற்கிடையில் ஜெர்மானிய அரசாங்கங்கள் துப்பாக்கி ஈட்டியை செயல்திட்டமாக மாற்றினால், சாத்தியமான மிகச் சிறந்த செயல்திட்டத்தா லும் சாத்தியமான மிகச் சிறந்த அரசியலமைப்புச் சட்டத் தாலும் ஏதாவது பயன் உண்டா?' என்று மார்க்ஸ் எழு தினார்.[15]

''சர்வாதிகாரம் என்ற கோஷத்தின் அர்த்தம் இதுவே...

''நாடுகளின் வாழ்க்கையில் முக்கியமான பிரச்சினைகள் வன்முறையால் மட்டுமே தீர்க்கப்படுகின்றன. பிற்போக் கான வர்க்கங்கள்தான் வழக்கமாக முதலில் வன்முறையில், உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபடுகின்றன. அவர்கள்தான் முதலில் 'துப்பாக்கி ஈட்டியை செயல்திட்டமாக' மாற்று கிறார்கள்; ஜனவரி 9ந் தேதி[16] முதல் ருஷ்ய சர்வாதிகாரம் முறைப்படியாகவும் சிறிதுகூட வழுவாமலும் எல்லா இடங் களிலும் இதையே செய்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை உண்மையாகவே ஏற்பட்டிருப்பதால், அரசியல் செயல்திட்டத்தில் துப்பாக்கி ஈட்டி முக்கியமான அம்சமாகி விட்டபடியால், ஆயுதந்தாங்கிய எழுச்சி அவசியமானதாக, அவசரமானதாகிவிட்டபடியால், அரசியலமைப்புச் சட்டப் பிரமைகளும் நாடாளுமன்றவாதத்தின் பள்ளிக்கூட பாணி யிலமைந்த முயற்சிகளும் புரட்சிக்கு முதலாளித்துவ துரோகத்தை மறைக்கின்ற வெறும் திரையாக, புரட்சி

யிலிருந்து முதலாளி வர்க்கம் 'பின்வாங்குகின்ற' உண்மையை மறைக்கின்ற திரையாகவே இருக்கின்றன. அந்த நிலைமையில் சர்வாதிகாரம் என்ற கோஷத்தைத்தான் உண்மையிலேயே புரட்சிகரமான வர்க்கம் முன்வைக்க வேண்டும்.''*

1905 அக்டோபர் புரட்சிக்கு முன்பு சர்வாதிகாரத்தைப் பற்றி போல்ஷிவிக்குகள் இவ்வாறு வாதிட்டார்கள்.

இந்தப் புரட்சியின் அனுபவத்துக்குப் பிறகு **காடேட்டுகளின் வெற்றியும் தொழிலாளர் கட்சியின் கடமைகளும்** (செயின்ட் பீட்டர்ஸ்பர்க், 1906) என்ற பிரசுரத்தில் (1906 மார்ச் 28ந் தேதி என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது) சர்வாதிகாரப் பிரச்சினையைப் பற்றி நான் விரிவாக ஆராய்ந்தேன். இந்தப் பிரசுரத்திலிருந்து மிக முக்கியமான வாதங்களை மட்டும் இங்கே மேற்கோளாகத் தருகிறேன். அதிலிருக்கும் ஏராளமான பெயர்களுக்குப் பதிலாக அந்தக் குறிப்பு காடேட்டுகளைப்[17] பற்றியதா அல்லது மென்ஷிவிக்குகளைப் பற்றியதா என்பதை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன். பொதுவாகச் சொல்வதென்றால் இந்தப் பிரசுரம் காடேட்டுகளை எதிர்த்தும் பகுதியளவுக்கு கட்சி அல்லாத மிதவாதிகளையும் அரை காடேட்டுகளையும் மற்றும் அரை மென்ஷிவிக்குகளையும் எதிர்த்தும் எழுதப்பட்டது. ஆனால் உண்மையில் சர்வாதிகாரத்தைப் பற்றி அதில் எழுதப்பட்டிருக்கின்ற ஒவ்வொன்றுமே இந்தப் பிரச்சினையில் காடேட்டுகளின் நிலைக்குத் தொடர்ச்சியாக நழுவிக்கொண்டிருந்த மென்ஷிவிக்குகளுக்கும் மெய்யாகவே பொருந்தக் கூடியதே.

''மாஸ்கோவில் துப்பாக்கிப் பிரயோகம் குறைந்து கொண்டிருந்த பொழுது, இராணுவ மற்றும் போலீஸ் சர்வாதிகாரம் காட்டுமிராண்டித்தனமான வெறியாட்டங்களை நடத்திக்கொண்டிருந்த பொழுது, ருஷ்யா முழுவதிலும் ஒடுக்குமுறைகளும் பெருந்திரளான மக்களின் மீது சித்திரவதைகளும் நடைபெற்றுக்கொண்டிருந்த பொழுது இடதுசாரியினர் வன்முறையைப் பயன்படுத்துவதைக் கண்டித்து புரட்சிகரமான கட்சிகள் அமைத்திருந்த வேலைநிறுத்தக்

* வி. இ. லெனின், **ஜனநாயகப் புரட்சியில் சமூக-ஜனநாயக வாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள்** (நூல் திரட்டு, முதல் பாகம், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1977) பார்க்க.—ப-ர்.

கமிட்டிகளுக்கு எதிராக காடேட்டுகளின் பத்திரிகைகள் எழுதின. டுபாஸொவ்களின் சம்பளப்பட்டியலில் இருக்கின்ற காடேட்டு பேராசிரியர்கள்—அவர்களுடைய விஞ்ஞானத்தைக் கூலி விற்பனை செய்பவர்கள்—'சர்வாதிகாரம்' என்ற சொல்லை 'வலுப்படுத்தப்பட்ட பாதுகாப்பு' என்று மொழி பெயர்க்கின்ற அளவுக்குச் சென்றார்கள். இந்த 'விஞ்ஞானிகள்' புரட்சிகரமான போராட்டத்தைக் கேவலப்படுத்துவதற்காகத் தங்களுடைய உயர்நிலைப்பள்ளித்தரத்தை உடைய இலத்தீன் மொழியறிவையும் சிதைத்தார்கள். காடேட்டு கனவான்களே! இதை தயவு செய்து குறித்துக்கொள்ளுங்கள், கடைசித் தடவையாகக் குறித்துக் கொள்ளுங்கள். சர்வாதிகாரம் என்பது எல்லையற்ற அதிகாரம்; அது சட்டத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை, வன்முறையை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. உள்நாட்டு யுத்தத்தில் வெற்றி அடைகின்ற எந்த சக்தியும் சர்வாதிகாரமாக மட்டுமே இருக்க முடியும். எனினும் சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் மீது நடத்துகின்ற சர்வாதிகாரம், குறைவான எண்ணிக்கையுள்ள போலீஸ் அதிகாரிகளின் கும்பல் மக்கள் மீது நடத்துகின்ற சர்வாதிகாரம் இருக்கிறது; மக்களின் பெருந்திரளான பெரும்பான்மையினர் குறைவான எண்ணிக்கையுள்ள கொடுமைக்காரர்கள், திருடர்கள் மற்றும் மக்களின் அதிகாரத்தைப் பறித்தவர்கள் மீது நடத்துகின்ற சர்வாதிகாரமும் இருக்கிறது என்பதே முக்கியமாகும். அவர்கள் 'சர்வாதிகாரம்' என்ற விஞ்ஞானரீதியான கருதுகோளைக் கொச்சைத்தனமாகச் சிதைத்ததன் மூலம், வலதுசாரியினர் மிக அதிகமான அளவுக்குச் சட்டவிரோதமான, கொடுமை மிக்க வன்முறையைக் கையாண்டு வரும் நேரத்தில் இடதுசாரியினரின் வன்முறையைப் பற்றித் தங்களுடைய கூக்குரல்களின் மூலம் தீவிரமான புரட்சிகரப் போராட்டத்தின் போது 'சமரசவாதிகள்' எந்த நிலை எடுப்பார்கள் என்பதை இந்தக் காடேட்டு கனவான்கள் பதியக் கூடிய விதத்தில் நிரூபித்து விட்டார்கள். போராட்டம் வெடிக்கின்றபொழுது 'சமரசவாதி' பாதுகாப்பைத் தேடி பேடித்தனமாக ஓடுகிறார். புரட்சிகரமான மக்கள் வெற்றியடையும் பொழுது (அக்டோபர் 17)[18] தன்னுடைய பதுங்குமிடத்திலிருந்து வெளியே ஊர்ந்து வருகிறார்,

அகம்பாவத்தோடு உடலைச் சிலுப்பிக்கொள்கிறார்; அது ஒரு 'மகத்தான' அரசியல் வேலைநிறுத்தம்! என்று கூச்சலிடுகிறார், தொண்டை கரகரக்கும் வரை பைத்தியம் பிடித்தவரைப் போல கூச்சலிடுகிறார். ஆனால் எதிர்ப்புரட்சி வெற்றிபெற்றால் 'சமரசவாதி' தோல்வியடைந்தவர்கள் மீது போலியான கடிந்துரைகளையும் நல்லறிவு போதனைகளையும் குவிக்கிறார். வேலைநிறுத்தம் வெற்றியடைந்தால் அது 'மகத்தானது'; வேலைநிறுத்தங்கள் தோல்வியடைந்தால் அவை குற்றவாளித்தனமானவை, பைத்தியக்காரத்தனமானவை, அறிவில்லாதவை மற்றும் அராஜகமானவை. தோல்வியடைந்த எழுச்சி முட்டாள்தனமானது, உணர்ச்சிவசப்பட்ட சக்திகள் செய்த கலகம், காட்டுமிராண்டித்தனம் மற்றும் முரட்டுத்தனம். சுருக்கமாகச் சொல்வதென்றால், அந்த சமயத்தில் எந்தத் தரப்பு மிகவும் பலமானதாக இருக்கிறதோ அதைப் பார்த்துக் கெஞ்சுவதற்கு சண்டை போடுபவர்களுக்கு நடுவே விழுந்து முதலில் ஒரு தரப்புக்கும் பிறகு மறு தரப்புக்கும் தீங்கு செய்து சுதந்திரத்துக்காக ஜீவமரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் மக்களின் போராட்டத்தை மட்டுப்படுத்தவும் அவர்களின் புரட்சிகரமான உணர்வை மழுங்கடிக்கச் செய்யவும் 'சமரசவாதியின்' அரசியல் மனசாட்சியும் அரசியல் நுண்ணறிவும் அவரைத் தூண்டுகின்றன.''*

மேலும் தொடர்வோம். சர்வாதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையில் திரு. ஆர். பிளாங்கு என்பவரை மறுத்து எழுதிய விளக்கங்களை இங்கே மேற்கோள் காட்டுவது மிகவும் பொருத்தமாகும். 1906ல் இந்த ஆர். பிளாங்கு பெயரளவுக்குப் பொதுமுறையான, ஆனால் உண்மையில் மென்ஷிவிக் பத்திரிகையில்[19] மென்ஷிவிக்குகளின் கருத்துக்களை விளக்கி எழுதியிருந்தார். ''ஜெர்மனியின் மகத்தான சமூக-ஜனநாயகக் கட்சி தலைமை தாங்கியுள்ள சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கம் முழுமையும் பின்பற்றிவரும் பாதையில் ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தைச் செலுத்துவதற்கு''

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 12, பக்கங்கள் 288-289 (ருஷ்யனில்).—ப-ர்.

மென்ஷிவிக்குகளின் முயற்சிகளைப் பாராட்டி எழுதியிருந்தார்.

வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், காடேட்டுகளைப் போல ஆர். பிளாங்கு நியாயமில்லாத, மார்க்சிஸ்ட் அல்லாத, கலகம் செய்யும் (இதரவை) புரட்சிக்காரர்களாக போல்ஷிவிக்குகளையும் "நியாயமான" மென்ஷிவிக்குகளையும் எதிரிடையாக நிறுத்தியதோடு ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியையும் ஒரு மென்ஷிவிக் கட்சியாகக் காட்டியிருந்தார். சமூக-மிதவாதிகள், சமாதானவாதிகள், இதரர்களின் சர்வதேசப் போக்கின் வழக்கமான முறை இதுதான். அவர்கள் எல்லா நாடுகளிலுமே சீர்திருத்தவாதிகளையும் சந்தர்ப்பவாதிகளையும் காவுத்ஸ்கிவாதிகளையும் லொங்கேவாதிகளையும் போல்ஷிவிக்குகளின் "பைத்தியக்காரத்தனத்துக்கு" எதிரான "நியாயமான" சோஷலிஸ்டுகள் என்று போற்றுகிறார்கள்.

1906ம் வருடத்தில் முன்னர் குறிப்பிடப்பட்ட பிரசுரத்தில் ஆர். பிளாங்குக்கு இப்படி பதிலளித்திருந்தேன்.

"திரு. பிளாங்கு ருஷ்யப் புரட்சியின் இரண்டு கட்டங்களை ஒப்பிட்டுக் காட்டுகிறார். முதல் கட்டத்தில் சுமாராக 1905 அக்டோபர்—டிசம்பர் மாதங்கள் அடங்கியிருக்கின்றன. இது புரட்சியின் சூறாவளிக் கட்டம். இரண்டாவது இன்றைய கட்டம். அதை டூமாவில்[20] காடேட் வெற்றிகளின் கட்டம் அல்லது ஒரு வேளை நாம் ஓரளவுக்கு சம்பவங்களை முந்திக் கொண்டு போக விரும்பினால் காடேட் டூமாவின் கட்டம் என்று கூறுவதற்கு நமக்கு உரிமையுண்டு.

"இந்தக் கட்டத்தில் அறிவு மற்றும் நியாயம் திரும்ப ஏற்பட்டிருக்கிறது, திட்டவட்டமான, முறைப்படியான, தொடர்ச்சியான நடவடிக்கைகளை மறுபடியும் தொடங்குவது சாத்தியமாகியிருக்கிறதென்று திரு. பிளாங்கு கூறுகிறார். இதற்கு மாறாக, முதற் கட்டத்தை தத்துவம் நடைமுறையிலிருந்து விலகிப்போன கட்டம் என்று அவர் வர்ணிக்கிறார். எல்லாவிதமான சமூக-ஜனநாயகக் கோட்பாடுகளும் கருத்துக்களும் மறைந்தன; ருஷ்யாவில் சமூக-ஜனநாயகத்தை நிறுவியவர்கள் எப்பொழுதுமே வற்புறுத்தி வந்த போர்த்தந்திரங்கள் மறக்கப்பட்டன; சமூக-ஜனநாயக உலகப்

பார்வை என்ற கட்டிடத்தின் தூண்கள் கூட வேரோடு பிடுங்கப்பட்டன.

"திரு. பிளாங்கு ஒரே ஒரு விவரத்தைத்தான் முக்கியமாக வலியுறுத்துகிறுர். புரட்சிகரமான சூருவளிக் கட்டத்தின் போது மார்க்சியத்தின் மொத்தத் தத்துவமுமே 'நடைமுறையிலிருந்து' விலகிவிட்டது என்பதே அது.

"அது உண்மையா? மார்க்சியத் தத்துவத்தில் முதலாவதாகவும் முக்கியமானதாகவும் இருக்கின்ற 'தூண்' எது? நவீன சமூகத்தில் முற்றிலும் புரட்சிகரமானதாக இருக்கும் ஒரே வர்க்கம், ஆகவே ஒவ்வொரு புரட்சியிலும் முன்னணிப் பாத்திரத்தை வகிக்கின்ற வர்க்கம் பாட்டாளி வர்க்கமே. அப்படியானுல் ஒரு கேள்வி எழுகிறது: சமூக-ஜனநாயக உலகப் பார்வையின் இந்தத் 'தூணை' புரட்சிச் சூருவளி வேரோடு பிடுங்கியெறிந்ததா? இல்லை, புரட்சிச் சூருவளி அதை மிகச் சிறப்பான வகையில் நிரூபித்திருக்கிறது. இந்தக் கட்டத்தில் முக்கியமான, முதலில் அநேகமாக ஒரே ஒரு போராட்டவீரன் பாட்டாளி வர்க்கமே. முதலாளித்துவப் புரட்சியில் வெகுஜன அரசியல் வேலைநிறுத்தம் என்ற கலப்பற்ற பாட்டாளி வர்க்க ஆயுதம் பயன்படுத்தப்பட்டது வரலாற்றிலேயே முதல் தடவையாக ஒரு வேளை இருக்கலாம், மிகவும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் கூட முன் எப்போதும் நடைபெற்றிராத அளவுக்கு அது உபயோகிக்கப்பட்டது. ஸ்துரூவேக்களும் பிளாங்குகளும் புலிகின் டூமாவில்[21] பங்கெடுக்குமாறு அறைகூவிய நேரத்தில், காடேட் பேராசிரியர்கள் மாணவர்களைப் படிப்போடு நிறுத்திக்கொள்ளுமாறு அறிவுரை சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில் பாட்டாளி வர்க்கம் போர்க் களத்தில் குதித்தது திட்டவட்டமான புரட்சித்தன்மையைக் கொண்டிருந்தது. பாட்டாளி வர்க்கம் தன்னுடைய பாட்டாளி வர்க்க ஆயுதத்தைக் கொண்டு 'அரசியலமைப்புச் சட்டம்'[22] என்று சொல்லப்படுகின்ற மொத்தத்தையுமே ருஷ்யாவுக்கு வென்றளித்தது. அதற்குப் பிறகு அந்தச் சட்டம் மூளியாக்கப் பட்டுக் கண்டபடி வெட்டப்பட்டுக் குறைக்கப்பட்டது. ஆறு மாதங்களுக்கு முன்பு ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் போல்ஷிவிக் மூன்ருவது காங்கிரஸ் வகுத்தளித்த போர்த்தந்திரத்தைப் பாட்டாளி வர்க்கம் 1905

அக்டோபர் போராட்டத்தில் உபயோகித்தது. அந்த காங்கிரஸ் வெகுஜன அரசியல் வேலைநிறுத்தத்தை ஆயுதந்தாங்கிய எழுச்சியோடு இணைக்க வேண்டிய அவசியத்தை வன்மையாக வலியுறுத்தியது;—1905ம் வருடத்தின் கடைசிக் காற்பகுதி முழுவதிலும் 'புரட்சிகரமான சூறுவளியின்' மொத்தக் காலகட்டத்திலும் இந்த இணைப்பு தனிச்சிறப்பான அம்சமாக இருக்கிறது. ஆகவே குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரின் சித்தாந்தி மிகவும் வெளிப்படையான, வெட்கங்கெட்ட முறையில் யதார்த்தத்தை உருமாற்றிக் காட்டுகிறுர். 'புரட்சிகரமான சூறுவளிக்' கட்டத்தின் போது மார்க்சியத் தத்துவம் செய்முறை அனுபவத்திலிருந்து விலகிவிட்டது என்பதை நிரூபிப்பதற்கு ஒரு விவரத்தைக் கூட அவர் காட்டவில்லை. இந்தச் சூறுவளியின் முக்கியமான கூறுகளை மறைப்பதற்கு அவர் முயற்சி செய்கிறுர்; ஆனல் அது 'சமூக-ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் கருத்துக்கள் அனைத்தின்', 'சமூக-ஜனநாயக உலகப் பார்வையின் எல்லாத் தூண்களின்' சரியான தன்மையை அதிகமான மேதாவிலாசத்தோடு நிரூபித்தது.

" 'சூறுவளிக்' கட்டத்தின் போது மார்க்சியக் கோட்பாடுகள், கருத்துக்கள் அனைத்துமே மறைந்தன என்ற மாபெரும் தவருன முடிவுக்கு திரு. பிளாங்கு வருவதற்குத் தூண்டிய உண்மையான காரணம் என்ன? இந்த அம்சத்தை ஆராய்ச்சி செய்வது மிகவும் சுவையானதாகும்; அரசியலில் அற்பவாதத்தின்* உண்மையான தன்மையை அது இன்னும் அதிகமாக அம்பலப்படுத்துகிறது.

"அரசியல் நடவடிக்கையின் பல்வேறு வடிவங்களையும் மக்கள் வரலாற்றைப் படைக்கின்ற பல்வேறு முறைகளையும் பொறுத்தவரை, 'புரட்சிகரமான சூறுவளிக்' கட்டத்தை இன்றைய 'காடேட்' கட்டத்திலிருந்து பிரதானமாக வேறுபடுத்துவது எது? முதலாவதாகவும் முக்கியமாகவும் 'சூறுவளிக்' கட்டத்தின் போது வரலாறு படைப்பதில் சில விசேஷமான முறைகள் உபயோகிக்கப்பட்டன, இவை அரசியல் வாழ்க்கையின் மற்ற கட்டங்களுக்கு அந்நியமான

* அரசியல் மற்றும் சமூகத் துறையில் குறுகிய மலட்டுத்தனமான மனேபாவத்தைக் கொண்டவர்கள் அற்பவாதிகள் (Philistines). அவர்களுடைய சித்தாந்தம் அற்பவாதம் எனப்படும்.—மொ-ர்.

வையாகும். இந்த முறைகளில் மிகவும் முக்கியமானவை பின் வருமாறு: 1) மக்கள் அரசியல் சுதந்திரத்தைக் 'கைப்பற்றுதல்'—எந்த உரிமைகளும் சட்டங்களும் இல்லாமல், எத்தகைய வரையறைகளும் இல்லாமல் (பல்கலைக்கழகங்களில் மட்டுமே என்றாலும் கூட்டம் கூடுகின்ற சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், சங்கம் அமைப்பதற்கான சுதந்திரம், காங்கிரஸ்களை நடத்துவதற்கான சுதந்திரம், இதரவை) அது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது; 2) புரட்சிகரமான ஆட்சியதிகாரத்தின் புதிய உறுப்புக்கள் ஏற்படுத்தப்படுதல்—தொழிலாளர்கள், படைவீரர்கள், இரயில்வேத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள், கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் புதிய அதிகாரத்தை வகிக்கும் அமைப்புகள், இன்னும் இப்படிப்பட்ட பல. இந்த அமைப்புகள் மக்களின் புரட்சிகரமான பகுதிகளால் மட்டுமே ஏற்படுத்தப்பட்டன. தங்கள் மீது மாட்டப்பட்டிருந்த பழைய போலீஸ் விலங்குகளை ஒழித்துவிட்ட அல்லது ஒழித்துக் கொண்டிருந்த மக்களின் சுயேச்சையான நடவடிக்கையின் வெளிப்பாடாக, மக்களுடைய இயற்கையான மேதாவிலாசத்தின் உற்பத்தியாக எல்லாவிதமான சட்டங்கள், விதிமுறைகளையும் மீறி முற்றிலும் புரட்சிகரமான வழியில் இவை ஏற்படுத்தப்பட்டன. கடைசியாக, அமைப்பிலும் நடவடிக்கையிலும் அவை என்னதான் மூலக்கருத்தன்மையை, தாமாகவே தோன்றியெழுந்த தன்மையை, வடிவமில்லாத, செறிவில்லாத தன்மைகளைக் கொண்டிருந்த போதிலும், அவை உண்மையில் ஆட்சியதிகாரத்தின் உறுப்புக்களாக இருந்தன. அவை அரசாங்கமாக இயங்கின—உதாரணமாக, (செயின்ட் பீட்டர்ஸ்பர்கில்) அச்சகங்களைக் கைப்பற்றியபொழுது, புரட்சிகரமான மக்கள் தம்முடைய உரிமைகளைச் செயல்படுத்த முடியாதபடி தடுத்த போலீஸ் அதிகாரிகளைக் கைது செய்தபொழுது (இத்தகைய உதாரணங்கள் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் நடைபெற்றன, அங்கே தான் பழைய அரசாங்கம் மிகவும் பலம் பொருந்தியதாகவும் புதிய ஆட்சியதிகாரத்தின் உறுப்பு மிகவும் பலவீனமானதாகவும் இருந்தது). பழைய அரசாங்கத்துக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டாமென்று மக்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்த பொழுது அவை ஒரு அரசாங்கமாக இயங்

கின. அவை (தெற்கேயிருந்த ரயில்வே வேலைநிறுத்தக் கமிட்டிகள்) பழைய அரசாங்கத்தின் நிதிகளைப் பறிமுதல் செய்து புதிய மக்கள் அரசாங்கத்தின் தேவைகளுக்கு அவற்றைப் பயன்படுத்தின. ஆம், அவை ஒரு புதிய, மக்கள் அல்லது (உங்களுக்குப் பிடிக்குமோ என்னவோ) புரட்சிகரமான அரசாங்கத்தின் கருக்கள் என்பதில் சந்தேகமில்லை. அவற்றின் சமூக மற்றும் அரசியல் தன்மையில் அவை மக்களின் புரட்சிகரமான சக்திகளின் சர்வாதிகாரத்தின் மூலக் கருவைக் கொண்டிருந்தன. திருவாளர்கள் பிளாங்கு, கிஸெவெட்டர் அவர்களே! உங்களுக்கு இது ஆச்சரியமாக இருக்கலாம். இங்கே நீங்கள் 'வலுப்படுத்தப்பட்ட பாதுகாப்பைப்' பார்க்கவில்லையா? முதலாளி வர்க்கத்துக்கு அது சர்வாதிகாரத்துக்குச் சமமாயிற்றே! சர்வாதிகாரம் என்ற விஞ்ஞானக் கருதுகோளைப் பற்றி உங்களுக்கு எதுவுமே தெரியாதென்று நாங்கள் முன்பே உங்களிடம் சொல்லியிருக்கிறோம். சீக்கிரத்தில் அதை உங்களுக்கு விளக்குகிறோம். ஆனால் அதற்கு முன்பு 'புரட்சிகரச் சூறுவளிக்' கட்டத்திலிருந்த நடவடிக்கையின் மூன்றாவது 'முறையை' எடுத்துக் கொள்வோம். **மக்களுக்கு எதிராக வன்முறையைப் பயன் படுத்தியவர்கள் மீது மக்கள் வன்முறையைப் பிரயோகிப்பதே அது.**

''நாம் விவரித்துக் கூறிய ஆட்சியதிகார உறுப்புக்கள் கரு வடிவத்தில் சர்வாதிகாரத்தைப் பிரதிநிதித்துவம் செய்தன. ஏனென்றால் அவை வேறு எத்தகைய ஆட்சியதிகாரத்தையும் சட்டத்தையும் தரங்களையும் அங்கீகரிக்கவில்லை, அவை யாரால் ஏற்படுத்தப்பட்டவை என்பதைப் பற்றியும் அக்கறை காட்டவில்லை. சட்டத்துக்கு வெளியே இருக்கின்ற வரம்பற்ற அதிகாரம், பலம் என்ற சொல்லுக்குரிய மிக நேரடியான அர்த்தத்தில் பலத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பதே சர்வாதிகாரம். ஆனால் இந்தப் புதிய ஆட்சியதிகாரம் ஆதாரமாகக் கொண்டிருந்த, ஆதாரமாகக் கொள்ள முயற்சி செய்த பலம் குறைந்த எண்ணிக்கையுள்ள இராணுவ வெறியர்களால் பறிக்கப்பட்ட துப்பாக்கி ஈட்டிகளின் பலமல்ல, 'போலீசுப் படையினரின்' பலமல்ல, பணத்தின் பலமல்ல, முன்னர் நிறுவப்பட்ட அமைப்புக்களின் பலமல்ல; அம்மாதிரியாக ஒன்றுமே கிடையாது. புதிய

ஆட்சியதிகார உறுப்புக்களிடம் ஆயுதங்களோ, பணமோ, பழைய அமைப்புக்களோ இல்லை. அவற்றின் பலத்துக்கும் பலத்தின் பழைய கருவிகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை; போலீஸ் மற்றும் பழைய ஆட்சியதிகாரத்தின் இதர உறுப்புக் களின் கொடுங்கோன்மையிலிருந்து மக்களைக் காப்பாற்று வதற்கு நிறுவப்படுகின்ற வலுப்படுத்தப்பட்ட பாதுகாப்பை நாம் மனதில் கொள்ளாவிட்டால் 'வலுப்படுத்தப்பட்ட பாதுகாப்புக்கும்' அதற்கும் எந்த சம்பந்தமுமில்லை. திரு வாளர்கள் பிளாங்கு மற்றும் கிஸெவெட்டர் அவர்களே! உங்களால் இதைக் கற்பனை செய்ய முடியுமா?

''அப்படியானால் அந்த பலம் எதை அடிப்படையாகக் கொண்டிருந்தது? அது பெருந்திரளான மக்களை அடிப் படையாகக் கொண்டிருந்தது. பழைய ஆட்சிமுறையின் முந்திய உறுப்புகள் எல்லாவற்றிலுமிருந்தும் இந்தப் புதிய ஆட்சிமுறையை வேறுபடுத்திய முக்கியமான கூறு இதுவே. சிறுபான்மையினர் மக்கள் மீது, பெருந்திரளான தொழி லாளர்கள், விவசாயிகள் மீது நடத்திய ஆட்சியதிகாரத்தின் கருவிகளாகப் பழைய ஆட்சிமுறையின் உறுப்புகள் இருந் தன. புதிய ஆட்சிமுறையின் உறுப்புகள் சிறுபான்மையினர் மீது, குறைந்த எண்ணிக்கையுள்ள போலீஸ் கொடுமைக் காரர்கள் மீது, குறைந்த எண்ணிக்கையிலிருந்த, தனிச் சலுகைகளை அனுபவித்து வந்த மேன்மக்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் மீது மக்களின், தொழிலாளர்கள், விவசாயிகளின் ஆட்சியதிகாரத்தின் கருவிகளாகும். அதுதான் மக்களுக்கு எதிரான சர்வாதிகாரத்துக்கும் புரட்சிகரமான மக்களுடைய சர்வாதிகாரத்துக்கும் உள்ள வேறுபாடாகும். திருவாளர்கள் பிளாங்கு மற்றும் கிஸெவெட்டர் அவர்களே! இதை நன்ருகக் குறித்துக் கொள்ளுங்கள். சிறுபான்மை யினரது சர்வாதிகாரம் என்ற முறையில் பழைய ஆட்சிமுறை போலீஸ் தந்திரங்களின் உதவியினுல் மட்டுமே, பெருந் திரளான மக்கள் அரசாங்கத்தில் பங்கெடுப்பது மற்றும் அதை மேற்பார்வையிடுவதைத் தடுப்பதன் மூலமாக மட்டுமே தன்னைப் பதவியில் தக்கவைத்துக் கொண்டது. பழைய ஆட்சிமுறை பெருந்திரளான மக்கள் மீது தொடர்ச்சி யாக அவநம்பிக்கையைக் காட்டியது, ஒளியைக் கண்டு பயந்தது, மோசடியின் மூலம் தன்னைப் பதவியில் வைத்துக்

கொண்டது. பெருந்திரளான பெரும்பான்மையினருடைய சர்வாதிகாரம் என்ற முறையில் புதிய ஆட்சிமுறை விரிவான, பெருந்திரளான மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்ததனுல் மட்டுமே, அது மிகச் சுதந்திரமான, மிகவும் விரிவான, மிக உறுதியான முறையில் அரசாங்கக் கடமையில் பெருந்திரளான மக்களைச் சேர்த்துக் கொண்டதனுல் மட்டுமே தன்னை நிலைநிறுத்தியது, தன்னை நிலைநிறுத்துவதற்கு அதனுல் முடிந்தது. அது எதையும் மறைக்கவில்லை, எந்த இரகசியமும் எந்த விதிமுறைகளும் எந்த சம்பிரதாயமும் அதனிடம் இல்லை. சாராம்சத்தில் இதையே கேட்டது; நீ ஒரு தொழிலாளியா? போலீஸ் கொடுமைக்காரர்களின் கும்பலை ருஷ்யாவிலிருந்து ஒழிப்பதற்காகப் போராட நீ விரும்புகிருயா? அப்படியானுல் நீ எங்களுடைய தோழன். உன்னுடைய பிரதிநிதியைத் தேர்ந்தெடு. உனக்குச் சிறந்ததாகத் தோன்றுகின்ற வழியில் அந்தப் பிரதிநிதியை உடனே, இப்பொழுதே தேர்ந்தெடு. எங்களுடைய தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்தில், விவசாயிகள் கமிட்டியில், படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்தில் நாங்கள் அவரை முழு உறுப்பினராக மனப்பூர்வமாகவும் மகிழ்ச்சியோடும் சேர்த்துக் கொள்வோம், இன்னபிற. அது எல்லோரும் பங்கெடுத்துக்கொள்ளக் கூடிய ஆட்சியதிகாரமாக இருந்தது, அதன் எல்லா நடவடிக்கைகளையும் பெருந்திரளான மக்களின் பார்வைக்கு முன்னுல் நடத்தியது, அவர்கள் தொடர்பு கொள்ளக் கூடியது, அவர்களிடமிருந்தே நேரடியாகத் தோன்றியது, பெருந்திரளான சாமான்ய மக்களின், அவர்களுடைய சித்தத்தின் நேரடியான, உடனடியான கருவியாக இருந்தது.—புதிய ஆட்சிமுறை, அல்லது துல்லியமாகச் சொல்ல வேண்டுமென்ருல் அதன் கரு இப்படித்தான் இருந்தது; ஏனென்ருல் பழைய ஆட்சிமுறையின் வெற்றி வெகு சீக்கிரத்தில் இந்த இளம் செடியின் முளைகளை மிதித்து நசுக்கியது.

''திருவாளர்கள் பிளாங்கு மற்றும் கிஸெவெட்டர் அவர்களே! 'சர்வாதிகாரம்' எதற்காக, 'வன்முறை' எதற்காக என்று நீங்கள் ஒரு வேளை கேட்கலாம். மிகவும் விரிவான, பெருந்திரளான மக்கள் குறைந்த எண்ணிக்கையிலிருக்கும் சிலர் மீது வன்முறையை உபயோகிப்பது அவசியமா?

ஆயிரம் அல்லது பத்தாயிரம் பேர்கள் மீது கோடிக்கணக்கான மற்றும் பத்துக் கோடிக்கணக்கானவர்கள் சர்வாதிகாரிகளாக இருக்க முடியுமா?

''சர்வாதிகாரம் என்ற சொல்லை அவர்களுக்குப் புதிதான அர்த்தத்தில் முதன்முறையாகக் கேள்விப்படுகின்றவர்கள் வழக்கமாக இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். போலீஸ் அதிகாரத்தையும் போலீஸ் சர்வாதிகாரத்தையும் மட்டுமே மக்கள் பார்த்துப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் இல்லாமல் ஆட்சியதிகாரம் இருக்க முடியும், சர்வாதிகாரம் என்பது போலீஸ் சர்வாதிகாரமாக இருக்கத் தேவையில்லை என்பது அவர்களுக்குப் புதுமையாகத் தோன்றுகிறது. லட்சக்கணக்கிலிருப்பவர்கள் ஆயிரக் கணக்கானவர்களுக்கு எதிராக வன்முறையை உபயோகிக்க வேண்டியதில்லை என்று நீங்கள் சொல்கிறீர்களா? அப்படியானல் நீங்கள் தவறு செய்கிறீர்கள். ஒரு நிகழ்ச்சியை அதனுடைய வளர்ச்சியின் நிகழ்வுப் போக்கில் நீங்கள் பார்க்கவில்லை என்பதிலிருந்தே உங்கள் தவறு ஏற்படுகிறது. புதிய ஆட்சிமுறை வானத்திலிருந்து குதிக்கவில்லை, பழைய ஆட்சிமுறையோடு இணையாகத் தோன்றி அதற்கு எதிராகவும் அதனோடு போராடியும் வளர்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடுகிறீர்கள். ஆட்சியதிகாரத்தின் கருவிகளையும் உறுப்புக்களையும் உபயோகித்துத் தங்களை பலப்படுத்திக் கொண்டிருக்கும் கொடுங்கோலர்களுக்கு எதிராக வன்முறையை உபயோகிக்காவிட்டால் மக்களைக் கொடுங்கோலர்களிடமிருந்து விடுவிக்க முடியாது.

''இந்தக் கருத்து காடேட் மனங்களுக்கு வெகு தொலைவானதாகவும் 'நம்பமுடியாததாகவும்' தோன்றுகிறது. திருவாளர்கள் பிளாங்கு மற்றும் கிஸெவெட்டர் அவர்களே! நீங்கள் இந்தக் கருத்தைப் புரிந்துகொள்ள உதவியாக மிகவும் சாதாரணமான ஒரு உதாரணத்தைத் தருகிறேன். அவ்ராமொவ் ஸ்பிரிடோனவாவை தாக்கிச் சித்திரவதை செய்துகொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். ஸ்பிரிடோனவாவுக்கு ஆதரவாக பத்துக்கணக்கில், நூற்றுக்கணக்கில் ஆயுதமில்லாத மக்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவ்ராமொவ் தரப்பில் சில கஸாக்குகள் இருக்கிறார்கள். ஸ்பிரிடோனவா இருட்டறையில் அல்ல,

பகிரங்கமாகவே சித்திரவதை செய்யப்படுவாரானல் மக்கள் என்ன செய்வார்கள்? அவ்ராமொவ் மற்றும் அவருடைய மெய்க்காவலர்களுக்கு எதிராக அவர்கள் வன்முறையைப் பயன்படுத்துவார்கள். ஒரு வேளை அவர்கள் தங்களுடைய தோழர்கள் சிலரை தியாகம் செய்ய வேண்டியிருக்கும்; அவ்ராமொவ் அவர்களைச் சுட்டு வீழ்த்தியிருப்பார். ஆனல் கடைசியில் அவர்கள் வன்முறையின் மூலம் அவ்ராமொவ் மற்றும் அவருடைய கஸாக்குகளின் ஆயுதங்களைப் பிடுங்குவார்கள்; மனித உருவத்திலிருக்கின்ற இந்த மிருகங்களில் சிலரை அந்த இடத்திலேயே அவர்கள் கொலை செய்வதும் அநேகமாக நடக்கக் கூடியதே. அவர்கள் இன்னும் இது போன்ற கொடுமைகளைச் செய்யாதிருக்க வேண்டும் என்பதற்காகவும் மக்கள் மன்றத்தின் தீர்ப்புக்கு அவர்களைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகவும் எஞ்சியவர்களைச் சிறையிலே அடைப்பார்கள்.

''திருவாளர்கள் பிளாங்கு மற்றும் கிஸெவெட்டர் அவர்களே! ஆகவே அவ்ராமொவும் அவருடைய கஸாக்குகளும் ஸ்பிரிடோனவாவைச் சித்திரவதை செய்வது மக்களுக்கு எதிரான இராணுவ மற்றும் போலீஸ் சர்வாதிகாரம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். புரட்சிகரமான மக்கள் (அதாவது அறிவுரை கூறுகின்ற, எச்சரிக்கை செய்கின்ற, வருந்துகின்ற, கண்டிக்கின்ற, தேம்புகின்ற, புலம்புகின்ற மக்களல்ல, கொடுங்கோலர்களை எதிர்த்துப் போராடுகின்ற தகுதியுடையவர்கள்; குறுகிய மனம் கொண்ட அற்பவாதிகளல்ல, புரட்சிகரமான மக்கள்) அவ்ராமொவுக்கும்அவ்ராமொவ்களுக்கும் எதிராக வன்முறையைப் பயன்படுத்தும் பொழுது, அது புரட்சிகரமான மக்களுடைய சர்வாதிகாரம். அது சர்வாதிகாரம்; ஏனென்றல் அது அவ்ராமொவ் மீது மக்களுடைய அதிகாரம், அந்த அதிகாரம் எத்தகைய சட்டங்களாலும் கட்டுப்படுத்தப்படுவது அல்ல (அவ்ராமொவிடமிருந்து ஸ்பிரிடோனவாவை வன்முறையின் மூலம் காப்பாற்றுவதை 'சட்டத்துக்கு' எதிரானதென்று நினைத்து அற்பவாதிகள் ஒரு வேளை அதை எதிர்க்கலாம். அவ்ராமொவைக் கொல்வதைச் 'சட்டம்' அனுமதிக்கிறதா என்று அவர்கள் கேட்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. சில அற்பவாத சித்தாந்திகள் 'கொடுமையை எதிர்க்காதே'

என்ற தத்துவத்தை உருவாக்கவில்லையா?). சர்வாதிகாரம் என்ற விஞ்ஞானச் சொல் எவ்விதமான சட்டங்களாலும் கட்டுப்படுத்தப்படாத, எப்படிப்பட்ட விதிகளாலும் சிறிதும் கட்டுப்படுத்தப்படாத, வன்முறையை நேரான அடிப்படையாகக் கொண்ட அதிகாரத்தைத் தவிர வேறு கூடுதலாகவோ குறைவாகவோ எதையும் குறிப்பிடவில்லை. 'சர்வாதிகாரம்' என்ற சொல்லுக்கு இதைத் தவிர வேறு எந்த அர்த்தமும் கிடையாது. காடேட் கனவான்களே! இதைக் குறித்துக்கொள்ளுங்கள். மேலும், நாம் கூறிய உதாரணத்தில் மக்களுடைய சர்வாதிகாரத்தைத்தான் நாம் பார்க்கிறோம், ஏனென்றால் மக்கள், மக்கள் தொகையில் பெருந்திரளானவர்கள் யாராலும் அழைக்கப்படாமல் ஒரு குறிப்பிட்ட இடத்துக்குத் 'தற்செயலாக' வருபவர்கள், அந்த இடத்தில் தானாகவே தோன்றி நீதி வழங்கித் தண்டனை விதிக்கிறது, அதிகாரத்தை உபயோகிக்கிறது, ஒரு புதிய புரட்சிகரமான சட்டத்தைப் படைக்கிறது. கடைசியாக, அதுதான் புரட்சிகரமான மக்களின் சர்வாதிகாரம். மக்கள் முழுவதும் என்றில்லாமல் புரட்சிகரமான என்று மட்டும் ஏன் சொல்கிறோம்? அவ்ராமொவ்களின் கொடுமைகளினால் தொடர்ச்சியாகத் துன்பமடைகின்ற, மிகவும் வேதனையை அனுபவிக்கின்ற மக்கள் முழுவதிலும் உயிருக்குப் பயந்து அவர்களிடம் நடுங்குபவர்கள் சிலர் இருக்கிறார்கள்; வேறு சிலர் உதாரணமாகக் 'கொடுமையை எதிர்க்காதே' என்ற தத்துவத்தினால் தார்மிக ரீதியில் தரங்குன்றியவர்கள் சிலர் இருக்கிறார்கள்; அல்லது தத்துவத்தாலல்ல, தவறான எண்ணங்களால், பழக்கங்களால், அன்றாட நடைமுறையால் தரங்குன்றியவர்கள் இருக்கிறார்கள்; அலட்சியம் காட்டுபவர்களும் இருக்கிறார்கள்; அவர்களை நாம் அற்பவாதிகள் என்று சொல்கிறோம்; அவர்கள் தீவிரமான போராட்டத்திலிருந்து தனித்து நிற்பதில், தப்பிவிடுவதில் அல்லது மறைந்து கொள்வதிலும் கூட (சண்டையில் இழுக்கப்பட்டுக் காயமடைந்து விடக் கூடாது என்ற பயத்தினால்) அதிகமான நாட்டமுடைய குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர். அதனால் தான் மக்கள் முழுவதுமே சர்வாதிகாரத்தை நடத்தவில்லை; புரட்சிகரமான மக்கள் மட்டுமே சர்வாதிகாரத்தை நடத்துகிறார்கள். ஆனால் அவர்கள் மக்கள் முழுவதினரை

யும் ஒதுக்கிவிடுவதில்லை. அவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளின் நோக்கங்களை எல்லாவிதமான விவரங்களோடும் எல்லோரிடமும் விளக்கிக் கூறுகிறார்கள்; அவர்கள் அரசை நடத்துவதில் மட்டுமல்ல — அரசை நிர்வகிப்பதிலும் அரசை அமைப்பதிலும் மக்கள் முழுவதினரின் ஒத்துழைப்பையும் மனப்பூர்வமாகத் திரட்டுகிறார்கள்.

''ஆகவே நாம் தந்த சாதாரணமான உதாரணம் புரட்சிகரமான மக்களின் சர்வாதிகாரம்' என்ற விஞ்ஞானக் கருதுகோள், 'இராணுவ மற்றும் போலீஸ் சர்வாதிகாரம்' என்ற கருதுகோளினுடைய எல்லாக் கூறுகளையும் கொண்டிருக்கிறது. இந்தச் சாதாரண உதாரணத்தை அறிவிற்சிறந்த காடேட் பேராசிரியர் கூடப் புரிந்து கொள்ள முடியும் என்பதால், சமூக வாழ்க்கையின் அதிகச் சிக்கலான நிகழ்ச்சிகளுக்கு நாம் செல்வோம்.

''புரட்சி என்பது அந்த வார்த்தையின் கறாரான, நேரடியான அர்த்தத்தில், பல நூறுண்டுகளாக நடைபெற்று வரும் அவ்ராமொவ்களின் கொடுமைகளினால் ஒன்று திரண்டிருக்கும் கோபம் மக்களுடைய வாழ்க்கையில் வார்த்தைகளில் மட்டுமல்லாமல் செயல்களில் தனிநபர்களிடம் மட்டுமல்லாமல் **மில்லியன் கணக்கான மக்களின்** செயல்களில் வெடிக்கின்ற கட்டம். மக்கள் விழிப்படைந்து அவ்ராமொவ்களை ஒழிப்பதற்காகக் கொதித்தெழுகிறார்கள். மக்கள் அவ்ராமொவ்களிடமிருந்து ருஷ்ய வாழ்க்கையின் எண்ணற்ற ஸ்பிரிடோனவாக்களைக் காப்பாற்றுகிறார்கள், அவ்ராமொவ்களுக்கு எதிராக வன்முறையைப் பயன்படுத்துகிறார்கள், அவ்ராமொவ்களின் மீது தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டுகிறார்கள். பேராசிரியர் கிஸெவெட்டருக்காக நாம் எளிமைப்படுத்திக் கொடுத்த உதாரணத்தில் நடப்பதைப் போல அவ்வளவு சுலபமாக, 'அனைத்தும் உடனடியாக' நடந்துவிடுவதில்லை. அவ்ராமொவ்களுக்கு எதிராக மக்கள் நடத்துகின்ற இந்தப் போராட்டம், அந்த வார்த்தையின் கறாரான, நேரடியான அர்த்தத்தில் நடைபெறுகின்ற இந்தப் போராட்டம், அவ்ராமொவ்களைத் தங்களுடைய முதுகுகளிலிருந்து கீழே தள்ளுகின்ற நடவடிக்கை 'புரட்சிச் சூறாவளியில்' மாதக்கணக்கில், வருடக்கணக்கில் நடைபெறுகிறது. முதுகில் உட்கார்ந்திருக்கும் அவ்ராமொவ்

களைக் கீழே தள்ளுகின்ற மக்களுடைய இந்த நடவடிக்கை மாபெரும் ருஷ்யப் புரட்சி என்று சொல்லப்படுவதன் உண்மையான உள்ளடக்கமாகும். வரலாற்றைப் படைக்கின்ற முறைகளின் நிலையிலிருந்து பார்க்கும் பொழுது இந்த நடவடிக்கை, புரட்சிச் சூறுவளியை ஆராய்கின்ற பொழுது சற்று முன்னர் நாம் வர்ணித்த வடிவங்களில் நடைபெறுகிறது. அவை பின்வருமாறு: மக்கள் அரசியல் சுதந்திரத்தை, அதாவது அவர்கள் உபயோகிக்க முடியாது அவ்ராமொவ்கள் தடுத்த சுதந்திரத்தைக் கைப்பற்றுகிறார்கள்;—பழைய ஆட்சிமுறையின் கொடுங்கோலர்களுக்கு மேல், அவ்ராமொவ்களுக்கு மேல் அதிகாரத்தை, புதிய, புரட்சிகரமான அதிகாரத்தை மக்கள் படைக்கிறார்கள்;—இந்த வெறிபிடித்த நாய்களை, எல்லா அவ்ராமொவ்கள், டுர்னோவோக்கள், டுபாஸொவ்கள், மின்கள், இன்னும் பலர், இன்னும் பலரை அகற்றுவதற்கு, அவர்களுடைய ஆயுதங்களைப் பறித்து அவர்களை ஆபத்தில்லாதவர்களாகச் செய்வதற்காக மக்கள் அவ்ராமொவ்களுக்கு எதிராக வன்முறையைப் பயன்படுத்துகிறார்கள்.

''மக்கள் தங்களுடைய சுதந்திரத்தைக் கைப்பற்றுவது, புதியதான, சம்பிரதாய ரீதியில் அங்கீகரிக்கப்படாத, புரட்சிகரமான அதிகாரத்தைத் தோற்றுவிப்பது போன்ற இப்படிப்பட்ட சட்டவிரோதமான, ஒழுங்கற்ற, முறைப்படி இல்லாத, வகைப்படி அமையாத போராட்ட முறைகளைப் பின்பற்றுவது, மக்களை ஒடுக்குகின்றவர்களுக்கு எதிராக வன்முறையை உபயோகிப்பது நல்லதா? ஆம், அது மிகவும் நல்லதே. அது சுதந்திரத்துக்காக மக்களுடைய போராட்டத்தின் மிக உயர்ந்த வெளிப்பாடாகும். ருஷ்யாவின் மிகச் சிறந்த ஆண்களும் பெண்களும் போற்றும் சுதந்திரக் கனவுகள் நனவாகின்ற, சுதந்திரம் தனிப்பட்ட வீரர்களின் இலட்சியமாக மட்டுமின்றி பெருந்திரளான மக்களின் இலட்சியமாக வளரும் மாபெரும் காலகட்டத்தைக் குறிக்கிறது. அது (நம்முடைய உதாரணத்தில்) கூட்டத்தினர் அவ்ராமொவிடமிருந்து ஸ்பிரிடோனவாவைக் காப்பாற்றுவதையும் அவ்ராமொவிடமிருந்து பலாத்காரமாக ஆயுதத்தைப் பிடுங்கி அவரை ஆபத்தில்லாதவராகச் செய்வதையும் போல அதே மாதிரி நல்ல காரியமே.

''ஆனல் இது காடேட்டுகளின் மறைக்கப்பட்டிருக்கும் சிந்தனைகள், அச்சங்கள் ஆகியவற்றின் மையத்துக்கே நம்மைக் கொண்டு வந்துவிடுகிறது. நாம் கொடுத்த உதாரணத்தில் அவ்ராமொவ் ஸ்பிரிடோனவாவைச் சித்திரவதை செய்யும் பொழுது, சித்திரவதை செய்பவன் சட்டத்தின் பெயரால் அதைச் செய்வதால் அவனிடமிருந்து பலியிடப்படும் நபரைக் காப்பாற்றுவதற்கு அவசரப்படக் கூடாது, சட்டத்தை மீறக் கூடாது என்று அறிவுரை சொல்லிக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கின்ற அதே அற்பவாதியினுடைய மூக்குக் கண்ணுடியின் வழியாக அரசியலை, மொத்த மக்களின் விடுதலையை, புரட்சியைப் பார்ப்பதன் காரணமாகவே ஒரு காடேட் அற்பவாதிகளின் சித்தாந்தியாகிருர். நம்முடைய உதாரணத்தின்படி அந்த அற்பவாதி தார்மிக ரீதியில் ஒரு அரக்கன் என்பது சரியே; ஆனல் சமூக வாழ்க்கையின் மொத்தத்திலும் அற்பவாத அரக்கன் ஒரு தனி நபர் அல்ல, அவன் ஒரு சமூக நிகழ்வு என்பதை நாம் மறுபடியும் சொல்கிருேம். இது ஒரு வேளை சட்டத்தைப் பற்றிய முதலாளித்துவ அற்பவாதத் தத்துவத்தின் ஆழமாக வேரூன்றிய தப்பெண்ணங்களால் கட்டுப்படுத்தப் பட்டிருக்கலாம்.

'' 'சூருவளிக்' கட்டத்தின் போது மார்க்சியக் கோட்பாடுகள் அனைத்துமே மறக்கப்பட்டுவிட்டன என்பது சுயமாகவே புலப்படுவதாக திரு. பிளாங்கு முடிவு செய்வது ஏன்? ஏனென்ருல் அவர் மார்க்சியத்தை பிரென்டானேயிசமாக[23] உருமாற்றிவிடுகிருர்; சுதந்திரத்தைக் கைப்பற்றுவது, புரட்சிகரமான ஆட்சியதிகாரத்தை நிறுவுவது, மக்கள் வன்முறையைப் பயன்படுத்துதல் ஆகியவை போன்ற 'கோட்பாடுகள்' மார்க்சியம் அல்ல என்று நினைக்கிருர். இந்தக் கருத்து திரு. பிளாங்கின் கட்டுரை முழுவதிலுமே காணப்படுகிறது; திரு. பிளாங்கின் கட்டுரையில் மட்டுமல்லாமல் காடேட்டுகள் எல்லோருடைய கட்டுரைகளிலும் இன்று காடேட்டுகளை நேசிப்பதற்காக பிளெஹானவைப் புகழ்கின்ற மிதவாத மற்றும் தீவிரவாத முகாமைச் சேர்ந்த எல்லா எழுத்தாளர்களிடமும் தலைப்பில்லாத[24] என்ற குழுவைச் சேர்ந்த பெர்ன்ஷ்டைன்வாதிகள்,[25] புரோக்கபோவிச்சு

கள், குஸ்கோவாக்கள் மற்றும் tutti quanti* உட்பட எல்லோரிடமும் காணப்படுகிறது.

''இந்தக் கருத்து எப்படித் தோன்றியது, அது தோன்றுவது ஏன் நிச்சயம் என்பதை நாம் ஆராய்வோம்.

''அது பெர்ன்ஷ்டைன்வாதக் கருதுகோள்களிலிருந்து அல்லது இன்னும் விரிவாகச் சொல்வதென்றால் மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயகவாதிகளின் சந்தர்ப்பவாதக் கருதுகோள்களிலிருந்து நேரடியாகத் தோன்றியது. மேற்கு ஐரோப்பாவின் 'நெறிபிசகாத'[26] மார்க்சியவாதிகள் இந்தக் கருதுகோள்களில் அடங்கியிருக்கும் தவறுகளை முதலிலிருந்து கடைசி வரை, முறைப்படியாக அம்பலப்படுத்தி வருகிறார்கள். இவை இப்பொழுது ருஷ்யாவுக்குள் 'தந்திரமான முறையில்', வேறு உடையணிவித்து, வேறு சந்தர்ப்பத்தில் கள்ளத்தனமாகக் கொண்டுவரப்படுகின்றன. பெர்ன்ஷ்டைன்வாதிகள் மார்க்சியத்திலிருந்து அதன் நேரடியான புரட்சிகரமான அம்சத்தை நீக்கிவிட்டு ஏற்றுக்கொண்டார்கள், ஏற்றுக்கொள்கிறார்கள். நாடாளுமன்றப் போராட்டம் என்பது திட்டவட்டமான வரலாற்றுக் கால கட்டங்களுக்குக் குறிப்பிட்ட வகையில் பொருத்தமான ஆயுதங்களில் ஒன்று என்று அவர்கள் கருதுவதில்லை, அதை முக்கியமான, அநேகமாக ஒரே போராட்டவடிவமாகவும் ''வன்முறை', 'கைப்பற்றுதல்', 'சர்வாதிகாரம்' ஆகியவற்றை அது தேவையில்லாமற் செய்துவிடுவதாகவும் கருதுகிறார்கள். இது மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்துகின்ற அற்பவாதச் சிதைவு. பிளாங்குகளும் பிளெஹானவைப் போற்றுகின்ற மற்ற மிதவாதிகளும் இதைத்தான் இப்பொழுது ருஷ்யாவுக்குள் கள்ளத்தனமாகக் கொண்டுவருகிறார்கள். இப்படிச் சிதைப்பது அவர்களுக்கு மிகவும் பழக்கமாகிவிட்டபடியால், புரட்சிகரமான சூறவளிக் கட்டத்தின் போது மார்க்சியக் கோட்பாடுகளும் கருத்துக்களும் மறக்கப்பட்டன என்பதை நிரூபிப்பது அவசியமென்று அவர்கள் நினைத்துப் பார்ப்பது கூடக் கிடையாது.

''இப்படிப்பட்ட கருத்துத் தோன்றுவது ஏன் நிச்சயம்? ஏனென்றால் அது குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் வர்க்க

---

* அவர்களைப் போன்றவர்கள்.—ப-ர்.

நிலைமைக்கும் நலன்களுக்கும் மிகவும் நன்ருகப் பொருந்துகிறது. 'பரிசுத்தப்படுத்தப்பட்ட' முதலாளித்துவ சமூகத்தின் சித்தாந்திகள் சமூக-ஜனநாயகவாதிகள் தங்களுடைய போராட்டத்தில் உபயோகிக்கின்ற எல்லா முறைகளையும் ஒத்துக்கொள்கிருர்கள்—'சூருவளிக்' கட்டத்தின் போது புரட்சிகரமான மக்கள் உபயோகிக்கின்ற முறைகளைத் தவிர. ஆனல் புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகள் இவற்றை ஏற்றுக் கொள்வதோடு அவற்றை உபயோகிப்பதிலும் உதவி செய்கிருர்கள். முதலாளி வர்க்க நலன்கள் சர்வாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஆனல் பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாய வர்க்கத்தின் தலைமைக்கு இட்டுச் செல்லாத வகையில் மட்டுமே அது நடத்தப்பட வேண்டும், ஆட்சியதிகாரத்தின் பழைய, நிலப்பிரபுத்துவ சர்வாதிகார மற்றும் போலீஸ் உறுப்புக்களை முற்றிலும் அகற்றிவிடக் கூடாது என்றும் கோருகின்றன. முதலாளி வர்க்கம் இந்த உறுப்புக்களைப் பாதுகாக்கவும் அவற்றின் மீது அதன் நேரடியான நிர்வாகத்தை மட்டும் ஏற்படுத்தவும் விரும்புகிறது. இவை பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக அதற்கு அவசியமாக இருக்கின்றன; இவை முற்றிலும் ஒழிக்கப்படுவது பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்துக்கு மிகப் பெரும் அளவுக்கு உதவி செய்யும். அதனல்தான் வர்க்கம் என்ற முறையில் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு முடியாட்சி, மேல்சபை ஆகிய இரண்டும் புரட்சிகரமான மக்களுடைய சர்வாதிகாரத்தைத் தடுப்பதும் தேவைப்படுகின்றன. சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போராடு, ஆனல் ஆட்சியதிகாரத்தின் பழைய உறுப்புகளைத் தொடக் கூடாது, ஏனென்றல் அவை எனக்குத் தேவைப்படுகின்றன என்று முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்திடம் கூறுகிறது. 'நாடாளுமன்ற' முறையில், அதாவது முடியாட்சியோடு உடன்பாடு செய்துகொண்டு நாங்கள் வகுத்துத் தருகின்ற எல்லைகளுக்குள்ளாகப் போராடு, ஸ்தாபனங்களின் உதவியைக் கொண்டு போராடு—ஆனல் பொது வேலைநிறுத்தக் கமிட்டிகள், தொழிலாளர்கள், படைவீரர்களின் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள், இவைகளைப் போன்ற ஸ்தாபனங்கள் மட்டும் வேண்டாம்; முடியாட்சியோடு உடன்பாட்டின்

மூலம் நாங்கள் நிறைவேற்றப் போகின்ற சட்டத்தின் படி அங்கீகரிக்கப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட, மூலதனத் தைப் பாதுகாக்கக் கூடிய ஸ்தாபனங்களின் உதவியோடு போராடு.

''முதலாளி வர்க்கம் 'சூறுவளிக்' கட்டத்தைப் பற்றி வெறுப்பு, இகழ்ச்சி, ஆத்திரம், பகைமையோடு பேசு கிறது; ஆனால் டுபாஸோவினுல் பாதுகாக்கப்பட்ட அரசியல மைப்புச் சட்டவாதக் கட்டத்தைப் பற்றி மெய்மறந்து, உணர்ச்சிப் பரவசத்தோடு, பிற்போக்கைப் பற்றிய எல்லையற்ற அற்பவாதக் காதலோடு பேசுகிறதென்ருல் அதற்குக் காரணம் தெளிவானதே. மக்களைச் சார்ந்திருப்பது, அதே சமயத்தில் அவர்களுடைய புரட்சிகரமான முன்முயற்சி களைக் கண்டு அஞ்சுவது என்ற காடேட்டுகளின் நிரந்தர மான, மாற்றமடையாத தன்மையே இதற்கு மறுபடியும் காரணமாகும்.

'' 'சூறுவளி' மறுபடியும் ஏற்பட்டுவிடுமோ என்று முத லாளி வர்க்கம் மிகவும் ஆபத்தான பயத்தைக் கொண்டிருப் பதற்கும் புதிய, புரட்சிகரமான நெருக்கடியின் கூறுகளை அது ஏன் புறக்கணிக்கிறது, மறைக்கிறது, அரசியலமைப்புச் சட்டவாத பிரமைகளை மக்கள் மத்தியில் ஏன் வளர்க்கிறது, பரப்புகிறது என்பதற்கும் காரணம் தெளிவானதே.

'' 'சூறுவளிக்' கட்டத்தின் போது மார்க்சியத்தின் எல்லாக் கோட்பாடுகளும் கருத்துக்களும் மறக்கப்பட்டு விட்டன என்று திரு. பிளாங்கும் அவரைப் போன்றவர்களும் ஏன் கூறுகிருர்கள் என்பதை நாம் முழுமையாக விளக்கிவிட் டோம். எல்லா அற்பவாதிகளையும் போலவே திரு. பிளாங்கு மார்க்சியத்தின் புரட்சிகரமான அம்சத்தை நீக்கிவிட்டு அதை ஏற்றுக்கொள்கிருர்; சமூக-ஜனநாயகப் போராட்ட முறைகளில் அவற்றின் மிகவும் புரட்சிகரமான மற்றும் நேரடியான புரட்சிகர முறைகளை நீக்கிவிட்டு அவற்றை ஏற்றுக்கொள்கிருர்.

''பாட்டாளி வர்க்க இயக்கங்களை முதலாளி வர்க்கம் புரிந்துகொள்ளத் தவறுவதற்கு, கூர்மையான மற்றும் உறு தியான போராட்டத்தைக் கண்டு முதலாளி வர்க்கம் பேரச் சம் கொள்வதற்கு, சமூக வரலாற்றுப் பிரச்சினைகளைத் தீர்ப் பதற்குத் தீவிரமான மற்றும் நேரடியான புரட்சிகர முறை

யின், பழைய நிறுவனங்களை நொறுக்குகின்ற முறையின் ஒவ்வொரு வெளிப்பாட்டையும் முதலாளி வர்க்கம் வெறுப்பதற்கு உதாரணம் என்ற முறையில் 'சூறுவளிக்' கட்டத்தைப் பற்றி திரு. பிளாங்கின் அணுகுமுறை மிகச் சிறந்த வகையில் குறிக்கிறது. திரு. பிளாங்கு தன்னையும் தன்னுடைய முதலாளி வர்க்கக் குறுகிய புத்தி அனைத்தையும் வெளிக்காட்டிவிட்டார். சூறுவளிக் கட்டத்தின் போது சமூக-ஜனநாயகவாதிகள் 'தவறுகள்' செய்தார்கள் என்று எங்கோ கேள்விப்பட்டிருக்கிறார் மற்றும் படித்திருக்கிறார்—உடனே மார்க்சியத்தின் எல்லாக் 'கோட்பாடுகளுமே' (அவற்றைப் பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது!) மறக்கப்பட்டன என்று வேகமாக முடிவு செய்து தன்னுறுதியோடு, யாருமே மறுக்க முடியாத எந்தச் சான்றுமே அவசியமில்லை என்ற தோரணையோடு அறிவிக்கிறார். இந்தத் 'தவறுகளைப்' பொறுத்தவரை நாம் இதைத்தான் கூறுகிறோம்: தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியில், சமூக-ஜனநாயகத்தின் வளர்ச்சியில் எந்தத் தவறுகளுமே இல்லாத, வலது அல்லது இடதுசாரித் திரிபுகள் இல்லாத கட்டம் இருக்கிறதா? ஜெர்மன் சமூக-ஜனநாயகம் நடத்திய போராட்டத்தின் பாராளுமன்றக் கட்டம் (உலக முழுவதிலுமுள்ள குறுகிய புத்திகொண்ட முதலாளி வர்க்கத்தினர் இந்தக் கட்டத்தையே மிக உயர்ந்த எல்லையாகக் கருதுகிறார்கள்) இத்தகைய தவறுகளால் நிரம்பியிருக்கவில்லையா? சோஷலிசத்தின் பிரச்சினைகளைப் பற்றி திரு. பிளாங்கு முழு முட்டாளாக இல்லாமலிருந்தால் அவர் முல்பெர்கெர், டூரிங், Dampfersubvention[27] பற்றிய பிரச்சினை, 'இளைஞர்கள்'[28], பெர்ன்ஷ்டைன் அனுபவம், இன்னும் பலவற்றை சுலபமாக நினைவுபடுத்திக்கொள்ளலாம். ஆனல் சமூக-ஜனநாயக இயக்கத்தின் உண்மையான வளர்ச்சிப் போக்கை ஆராய்வதில் திரு. பிளாங்குக்கு அக்கறை கிடையாது; தன்னுடைய காடேட் கட்சியின் முதலாளித்துவ அற்பத்தனத்தை உயர்த்திக் காட்டுவதற்காகப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் களத்தைக் குறைப்பதே அவர் விரும்புவதெல்லாம்.

''சமூக-ஜனநாயக இயக்கம் தன்னுடைய சாதாரண, 'வழக்கமான' பாதையிலிருந்து விலகிச் சென்றது என்ற

ஒளியில் இந்தப் பிரச்சினையை ஆராய்ந்தால், இந்த அம்சத்திலும் கூட 'புரட்சிகரமான சூருவளிக்' காலகட்டத்தின் போது—அதற்கு முன்பிருந்ததைக் காட்டிலும்—சமூக-ஜனநாயகவாதிகளிடம் ஒற்றுமையும் சித்தாந்தக் கூர்மையும் அதிகமாக இருந்ததே தவிரக் குறைவாக இல்லை என்பதை நாம் காண முடியும். 'சூருவளிக்' கட்டத்தின் போது பின்பற்றப்பட்ட செயல்தந்திரம் சமூக-ஜனநாயக இயக்கத்தின் இரண்டு பிரிவினரையும் மேலும் பிரிக்கவில்லை, அதற்கு மாருக அவர்களை இன்னும் நெருக்கமாகக் கொண்டு வந்தது. பழைய கருத்து வேறுபாடுகள் மறைந்து ஆயுதந் தாங்கிய எழுச்சியைப் பற்றிய பிரச்சினையில் கருத்து ஒற்றுமை ஏற்பட்டது. புரட்சிகரமான ஆட்சியதிகாரத்தின் பிரத்யேகமான கரு அமைப்புக்களான தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளில் இரு பிரிவுகளையும் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகள் சுறுசுறுப்பாகப் பங்கெடுத்தனர். அவர்கள் படைவீரர்களையும் விவசாயிகளையும் இந்த சோவியத்துகளுக்குள் கொண்டுவந்தார்கள். குட்டி முதலாளித்துவப் புரட்சிகரக் கட்சிகளோடு சேர்ந்து கூட்டாகப் புரட்சிகரமான அறிக்கைகளை வெளியிட்டார்கள். புரட்சிக்கு முந்திய கட்டத்தின் போதிருந்த பழைய வாதப் பிரதிவாதங்களுக்குப் பதிலாக செய்முறைப் பிரச்சினைகளில் கருத்தொற்றுமை ஏற்பட்டது. புரட்சிகரமான அலையின் எழுச்சி பழைய கருத்து வேறுபாடுகளை ஒதுக்கித் தள்ளியது, போர்க் குண மிக்க செயல்தந்திரத்தைக் கையாளுமாறு சமூக-ஜனநாயகவாதிகளை நிர்ப்பந்தித்தது; டூமாவைப் பற்றிய பிரச்சினையை பின்னணிக்குத் தள்ளிவிட்டு ஆயுதந்தாங்கிய எழுச்சியைப் பற்றிய பிரச்சினையை செயல்திட்டத்தில் வைத்தது; உடனடியான கடமைகளை நிறைவேற்றுவதில் சமூக-ஜனநாயகவாதிகளையும் புரட்சிகர முதலாளித்துவ ஜனநாயகவாதிகளையும் மேலும் நெருக்கமாகக் கொண்டுவந்தது. ஸெவெர்னி கோலொஸ்[29] பத்திரிகையில் மென்ஷிவிக்குகள் போல்ஷிவிக்குகளோடு கூட்டாக, பொது வேலைநிறுத்தத்துக்கும் ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கும் அறைகூவினார்கள், ஆட்சியகாரத்தைக் கைப்பற்றும் வரை இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறு தொழிலாளர்களை அறைகூவினர்

கள். புரட்சிகரமான நிலைமையே செய்முறை கோஷங்களைக் கொடுத்தது. சம்பவங்களை மதிப்பிடுவதில் விவரங்களைப் பற்றி மட்டுமே வாதங்கள் நடைபெற்றன. உதாரணமாக, தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளை புரட்சிகரமான சுயநிர்வாகத்தின் உறுப்புகள் என்று நச்சாலோ[30] கருதியது; ஆனால் நோவயா ஷிஸின்[31] அவை பாட்டாளி வர்க்கத்தைப் புரட்சிகரமான ஜனநாயகவாதிகளோடு ஒன்று சேர்க்கின்ற புரட்சிகரமான ஆட்சியதிகாரத்தின் உறுப்புக்களின் கரு வடிவம் என்று கருதியது. நச்சாலோ பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நோக்கிச் சாய்ந்தது. நோவயா ஷிஸின் பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாய வர்க்கத்தின் ஜனநாயக சர்வாதிகாரத்தை ஆதரித்தது. ஆனால் இப்படிப்பட்ட கருத்துவேறுபாடுகளை ஐரோப்பாவில் ஒவ்வொரு சோஷலிஸ்ட் கட்சியின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் பார்க்கவில்லையா?

''திரு. பிளாங்கு விவரங்களைத் திரித்துக் கூறுவதும் சமீப வரலாற்றை மிக மோசமான முறையில் மாற்றி எழுதுவதும் முதலாளித்துவ வர்க்கத்தின் தனக்குத் தானே மகிழ்ச்சியடைகிற அற்பத்தனத்துக்குக் கூடுதலுமில்லாமல் குறைவுமில்லாமல் ஒரு மாதிரியாகும்; புரட்சிகரமான சூறுவளிக் கட்டம் அதற்கு முட்டாள்தனமாகத் தோன்றுகிறது ('எல்லாக் கோட்பாடுகளும் மறக்கப்பட்டுவிட்டன', 'மதிநுட்பமும் பகுத்தறிவும் அநேகமாக மறைந்து விட்டன'), புரட்சியை ஒடுக்குகின்ற மற்றும் அற்பவாத 'முன்னேற்றக்' காலகட்டங்கள் (டுபாஸொவ்களால் பாதுகாக்கப்பட்டவை) நியாயமான, திட்டவட்டமான, முறைப்படியான நடவடிக்கையின் கட்டங்களாக அதற்குத் தோன்றுகின்றன. இரு காலகட்டங்களையும் ('சூறுவளிக்' கட்டம் மற்றும் காடேட் கட்டம்) இப்படி ஒப்பிட்டு மதிப்பீடு செய்வது திரு. பிளாங்கின் கட்டுரை நெடுகிலும் காணப்படுகிறது. ஒரு ரயில் வண்டியின் வேகத்தோடு மனிதகுல வரலாறு விரைவாகச் செல்லும் பொழுது அவர் அதைச் 'சூறுவளி', 'காட்டாறு', எல்லாக் 'கோட்பாடுகளும், கருத்துக்களும்' 'மறைந்து போதல்' என்று கூறுகிறார். வரலாறு வண்டிக்குதிரையைப் போல மெதுவாகப் போகும் பொழுது அது பகுத்தறிவுக்கும் முறைக்கும் குறியீடாகி விடுகிறது. பெருந்திரளான

மக்கள் தங்களுடைய மெருகிடப்படாத பூர்விகத்தன்மையோடும் எளிமையான, கரடுமுரடான உறுதியோடும் வரலாற்றைப் படைக்கத் தொடங்கும் பொழுது 'கோட்பாடுகளையும் தத்துவங்களையும்' உடனடியாகவும் நேரடியாகவும் அமுலாக்கத் தொடங்கும் பொழுது முதலாளி வர்க்கத்தினர் பயந்து போய்விடுகிறார்கள், 'அறிவுத்திறன் பின்னணிக்குப் போய்க்கொண்டிருக்கிறது' என்று ஓலமிடுகிறார்கள் (அற்பவாதக் கதாநாயகர்களே! உண்மை இதற்கு மாறாக இல்லையா? இத்தகைய தருணங்களில் வரலாற்றுத் துறைக்குள் நுழைவது தனிநபர்களுடைய அறிவு அல்ல, பெருந்திரளான மக்களின் அறிவுதானே? இப்படிப்பட்ட சமயத்தில் பெருந்திரளான மக்களின் அறிவு சாய்வுநாற்காலிச் சக்தியாக இல்லாமல் வீரியமிக்க, செயல்திறன் கொண்ட சக்தியாக வில்லையா?). பெருந்திரளான மக்களின் நேரடியான இயக்கம் துப்பாக்கிப் பிரயோகங்கள், ஒடுக்குமுறை நடவடிக்கைகள், சவுக்கடிகள், வேலையின்மை, பட்டினி ஆகியவற்றால் நசுக்கப்படும் பொழுது, டுபாஸொவினால் பண உதவி செய்யப்படுகின்ற பேராசிரிய விஞ்ஞானப் புல்லுருவிகள் தாங்கள் பதுங்கிக் கொண்டிருந்த இண்டு இடுக்குகளிலிருந்து ஊர்ந்து வந்து பெருந்திரளான மக்களின் பெயரால் மக்களின் சார்பில் நிர்வாகத்தைத் தொடங்கி வசதி படைத்த சிலருக்காக மக்களுடைய நலன்களை விற்பனை செய்யவும் துரோகம் செய்யவும் ஆரம்பிக்கும் பொழுது அமைதி மற்றும் சமாதான பூர்வமான முன்னேற்றத்தின் சகாப்தம் ஆரம்பமாகிவிட்டது, 'சிந்தனை மற்றும் பகுத்தறிவின் நேரம் வந்துவிட்டது' என்று அப்பொழுது தான் அற்பவாதத்தின் வீரர்கள் நினைக்கிறார்கள். முதலாளி வர்க்கத்தினர் எப்பொழுதுமே, எங்குமே தனக்கு உண்மையாகத்தான் நடந்து கொள்கிறார்கள். நீங்கள் போலியார்னயா ஸ்வெஸ்தா[32] அல்லது நாஷா ஷிஸினை எடுத்துக் கொள்ளுங்கள், நீங்கள் ஸ்துருவே அல்லது பிளாங்கைப் படியுங்கள், புரட்சிக் கட்டங்களையும் சீர்திருத்தக் கட்டங்களையும் பற்றி இதேவிதமான குறுகிய நோக்கத்தோடு, பேராசிரியப் போலிப் புலமையோடு, அதிகாரவர்க்கத்தன்மை கொண்ட ஜீவனற்ற மதிப்பீட்டைப் பார்க்க முடியும். புரட்சிக் கட்டங்கள் பைத்தியக்காரத்தனமான காலம், tolle Jahre, சிந்தனை

மற்றும் பகுத்தறிவின் மறைவு. சீர்திருத்தக் கட்டங்கள் 'திட்டவட்டமான மற்றும் முறைப்படியான' நடவடிக்கைகளைக் கொண்டிருக்கும் காலகட்டங்களாம்.

''நான் சொல்வதைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். பிளாங்குகள் சில காலகட்டங்களைக் காட்டிலும் வேறு காலகட்டங்களை விருப்பத்தோடு தேர்ந்தெடுக்கிறார்கள் என்று நான் வாதாடவில்லை. இது விருப்பத்தைப் பொறுத்த விவகாரமல்ல, நமது அகநிலையான விருப்பங்கள் வரலாற்றுக் காலகட்டங்களின் மாற்றங்களை நிர்ணயிப்பதில்லை. ஏதாவதொரு காலகட்டத்தின் சிறப்புத்தன்மைகளை ஆராய்கின்ற பொழுது (இது நம்முடைய விருப்பங்களுக்கும் அனுதாபங்களுக்கும் அப்பாற்பட்டது) பிளாங்குகள் வெட்கமில்லாத வகையில் உண்மையைத் திரிக்கிறார்கள் என்பதே முக்கியம். அற்பவாத, காடேட், சீர்திருத்தவாத முன்னேற்ற காலகட்டங்களைக் காட்டிலும் புரட்சிகரமான காலகட்டங்களின் போதுதான் மேலும் விரிவாக, வளமாக, அதிக உணர்வுபூர்வமாக, அதிகத் திட்டவட்டமாக, முறைப்படியாக, அதிகத் துணிவாக, அதிகத் தத்ரூபமாக வரலாறு படைக்கப்படுகின்ற சிறப்பைக் காண்கின்றோம். ஆனால் பிளாங்குகள் உண்மையைத் தலை கீழாக மாற்றிவிடுகிறார்கள்! அவர்கள் அற்பத்தனத்தை வரலாற்றைப் படைக்கும் அற்புதமான செயலாகக் காட்டப் பார்க்கிறார்கள். ஒடுக்கப்பட்ட அல்லது கீழே தள்ளி மிதிக்கப்பட்ட பெருந்திரளான மக்களின் செயலற்ற தன்மையை அதிகாரவர்க்கத்தினர் மற்றும் முதலாளி வர்க்கத்தினர் வேலையிலுள்ள 'முறையின்' வெற்றி என்று கருதுகிறார்கள். அற்பமான அதிகாரிகளும் மிதவாத penny-a-liner (ஒரு வரிக்கு ஒரு பென்னி சன்மானம் வாங்குகின்ற) பத்திரிகையாளர்களும் நகல் சட்டங்களைக் கண்டபடி குறை கூறுவதற்குப் பதிலாக 'சாதாரண மக்களின்' நேரடியான அரசியல் நடவடிக்கை என்ற காலகட்டம் ஆரம்பமாகின்ற பொழுது, அவர்கள் நேரடியாக மக்களை ஒடுக்குகின்ற எல்லா நிறுவனங்களையும் நொறுக்கி விட்டு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி மக்களிடமிருந்து கொள்ளையடிக்கின்ற எல்லா வகையானவர்களுக்கும் சொந்தமாகக் கருதப்பட்டவைகளைப் பறிக்கும் பொழுது—சுருக்கமாகச் சொல்வதென்றால் கீழே தள்ளப்பட்

டிருக்கும் கோடிக் கணக்கான மக்களின் சிந்தனையும் பகுத்தறிவும் புத்தகங்களைப் படிப்பதற்கு மட்டுமல்லாமல், செயலுக்கு, ஜீவாதாரமான மனிதப் பண்புடைய நடவடிக்கைக்கு, வரலாறு படைப்பதற்கு விழித்தெழுகின்ற பொழுது சிந்தனையும் பகுத்தறிவும் மறைந்துவிட்டதென்று அவர்கள் கூச்சலிடுகிறார்கள்.''

சர்வாதிகாரப் பிரச்சினையைப் பற்றி 1905 மற்றும் 1906ம் வருடங்களில் ருஷ்யாவில் நடைபெற்ற கருத்துப் போர் இத்தகையதாகும்.

உண்மையாகவே ருஷ்யாவில் 1905ம் வருடத்தில் திரு. பிளாங்கும் காடேட்டுகளும் எப்படி வாதிட்டார்களோ அதைப் போலவே ஜெர்மனியில் டிட்மன்களும் காவுத்ஸ்கிகளும் கிரிஸ்பின்களும் ஹில்பெர்டிங்குகளும் பிரான்சில் லொங்கேயும் கம்பெனியினரும் இத்தாலியில் டுராட்டியும் அவருடைய நண்பர்களும் பிரிட்டனில் மாக்டொனால்டுகளும் ஸ்னேடென்களும் சர்வாதிகாரத்தைப் பற்றி வாதாடுகிறார்கள். அவர்களுக்கு சர்வாதிகாரம் என்பது என்ன என்று தெரியாது, அதற்குத் தயாரிப்பது எப்படி என்று தெரியாது, அதைப் புரிந்து கொள்வதற்கும் அமுலாக்குவதற்கும் அவர்களுக்குத் தகுதியும் கிடையாது.

20. 10. 1920

நூல் திரட்டு,
தொகுதி 41,
பக்கங்கள் 369-391

## பதிப்பாளர் குறிப்புகள்

1 ஸார்யா (காலை உதயம்)—மார்க்சிய விஞ்ஞானப் பத்திரிகை; இஸ்க்ரா பத்திரிகையின் ஆசிரியர் குழு 1901-1902ம் வருடங்களில் இப்பத்திரிகையை ஷ்டுட்கார்ட்டிலிருந்து சட்டபூர்வமாக வெளியிட்டு வந்தது.

இஸ்க்ரா (தீப்பொறி)—அகில ருஷ்ய அளவில் முதன் முறையாக வெளிவந்த இரகசிய மார்க்சிஸ்ட் செய்திப் பத்திரிகை. 1900ம் வருடத்தில் லெனின் இப்பத்திரிகையை நிறுவினார். ருஷ்யாவில் புரட்சிகரமான மார்க்சியத் தொழிலாளர் கட்சியை உருவாக்குவதில் இப்பத்திரிகை முக்கியமான பாத்திரத்தை வகித்தது.—3.

2 ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் வேலைத் திட்டம் 1903 ஆகஸ்டில் நடைபெற்ற ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசில் நிறைவேற்றப் பட்டது.—4.

3 1905ல் ருஷ்யாவில் முதலாவது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடைபெற்றது.—4.

4 ரு.ச.ஜ.தொ. கட்சியின் மூன்றாவது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட ஆயுதந்தாங்கிய எழுச்சியைப் பற்றி என்னும் தீர்மானத்திலிருந்து இந்த மேற்கோள் தரப்பட்டிருக்கிறது. இத்தீர்மான வாசகத்தை லெனின் எழுதினார்.—4.

5 புரோஸ்வெஷேனியே (அறிவுப் பெருக்கம்)—போல்ஷிவிக்குகளின் தத்துவார்த்த மாதப் பத்திரிகை; 1911-1914ம் வருடங்களிலும் 1917ம் வருடத்திலும் செயின்ட்

பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து சட்டபூர்வமாக வெளியிடப்பட்டு வந்தது.—5.

6 லெனின் முதலாவது ருஷ்யப் புரட்சியின் போது நடைபெற்ற பொருளாதார மற்றும் அரசியல் வேலைநிறுத்தங்களைப் பற்றிய மாதாந்திரத் தகவல்களை ஆராய்ந்து எழுதினார். ருஷ்யாவில் வேலைநிறுத்தங்களின் புள்ளிவிவரங்கள், ருஷ்யாவில் உள் கட்சிப் போராட்டத்தின் வரலாற்று ரீதியான அர்த்தம் ஆகிய கட்டுரைகளில் இவற்றைப் பற்றி லெனின் எழுதினார்.—5.

7 காவுத்ஸ்கிவாதிகள்—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதியான கா. காவுத்ஸ்கியின் ஆதரவாளர்கள். இவர்கள் ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தில் புரட்சிகரமான மார்க்சியத்தை எதிர்த்து ''நடுவாந்தரப்'' போக்குடைய கோஷ்டியை 1910ம் வருடத்தில் அமைத்தார்கள்.

லொங்கேவாதிகள்—பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியில் நடுவாந்தரப் போக்கை ஆதரித்தவர்கள்; ழான் லொங்கே இவர்களுடைய தலைவர்.—6.

8 1905 டிசம்பரில் நடைபெற்ற ஆயுதமேந்திய எழுச்சியே 1905ம் வருடப் புரட்சியின் உச்ச கட்டம்.

மாஸ்கோ சோவியத்தின் அறைகூவலுக்கிணங்க டிசம்பர் 7(20)ந் தேதியன்று பொது அரசியல் வேலைநிறுத்தம் மாஸ்கோவில் தொடங்கிய பொழுது அது ஆரம்பமாயிற்று. அது சீக்கிரத்தில் ஆயுதம் தாங்கிய எழுச்சியாக வளர்ச்சியடைந்தது.

1905 டிசம்பரிலும் 1906 ஜனவரியிலும் மாஸ்கோவைப் பின்பற்றி வேறு பல நகரங்களிலும் ஆயுதம் தாங்கிய எழுச்சிகள் வெடித்தன. ஆனால் ஜாரிஸ்ட் அரசாங்கம் இவற்றைக் குரூரமாக ஒடுக்கியது.—6.

9 போல்ஷிவிக்குகளும் மென்ஷிவிக்குகளும்—ருஷ்ய சமூக-ஜனநாயகத்தில் இரண்டு போக்குகள்.

ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (1903) மத்திய அமைப்புக்களுக்கு நடைபெற்ற தேர்தல்களில் லெனின் ஆதரவாளர்கள் பெரும்பான்மையில் வெற்றிபெற்றனர். இவர்கள் ''போல்ஷிவிக்குகள்'' (பெரும்பான்மையோர்) என்று அழைக்கப்பட்டனர்; சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மையினராகி ''மென்ஷிவிக்குகள்''(சிறுபான்மையோர்) என்று பெயர் பெற்றனர்.

1905-1907ம் வருடப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் தொழிலாளி வர்க்கம்

விவசாயிகளுடன் கூட்டுச் சேருவதையும் மென்ஷிவிக்குகள் எதிர்த்தார்கள். முதலாளித்துவ மிதவாதிகளுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்றனர். 1905-1907ம் வருடங்களில் நடைபெற்ற புரட்சி தோல்வி அடைந்தபிறகு பிற்போக்கான சூழ்நிலை நிலவிய காலத்தில் மென்ஷிவிக்குகளில் பெரும்பான்மையோர் சட்ட விரோதமான தொழிலாளர் கட்சியைக் கலைக்கக் கோரினர். அவர்கள் ''கலைப்புவாதிகள்'' என்னும் பெயர் பெற்றனர். 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து மென்ஷிவிக்குகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களானுர்கள்; அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்ததோடு நாட்டில் உருவாகிக் கொண்டிருந்த சோஷலிஸ்ட் புரட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்தினுர்கள்.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் வெளிப்படையாகவே எதிர்ப் புரட்சிக் கட்சியாகி சோவியத் ஆட்சியை எதிர்த்துச் சதிகளும் கலகங்களும் செய்தார்கள்.—6.

10 1905 அக்டோபரில் நடைபெற்ற அகில ருஷ்ய அரசியல் வேலைநிறுத்தம் இங்கே குறிப்பிடப்படுகிறது. இருபது லட்சத்துக்கும் அதிகமானவர்கள் அதில் பங்கு கொண்டார்கள். சர்வாதிகார ஆட்சியை ஒழித்தல், புலிகின் டூமாவைத் தீவிரமாக பகிஷ்கரித்தல், அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுதல், ஜனநாயகக் குடியரசை நிறுவுதல் ஆகிய கோஷங்களின் அடிப்படையில் அக்டோபர் வேலைநிறுத்தம் நடைபெற்றது.

அகில ருஷ்ய அரசியல் வேலைநிறுத்தம் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சக்தியையும் பலத்தையும் எடுத்துக் காட்டி கிராமங்களிலும் இராணுவத்திலும் கடற்படையிலும் புரட்சிகரமான போராட்டத்தின் வளர்ச்சிக்கு உத்வேகமூட்டியது.—7.

11 கம்யூனிஸ்டு அகிலம் (மூன்ருவது அகிலம்) பல்வேறு நாடுகளிலுமிருந்த கம்யூனிஸ்ட் கட்சிகளை ஐக்கியப்படுத்திய சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர நிறுவனம். 1919 மார்ச்சில் மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரசில் இது நிறுவப்பட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தில் இணைவதற்கு லெனின் தயாரித்த 21 நிபந்தனைகளை 1920 ஜூலை—ஆகஸ்டில் நடைபெற்ற கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் அங்கீகரித்தது.

கம்யூனிஸ்டு அகிலம் எல்லா நாடுகளிலும் உள்ள உழைப்பாளி மக்களுக்கிடையில் உள்ள தொடர்புகளை மறுபடியும் அமைத்து வலுப்பெறச் செய்தது. சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஏற்பட்டிருந்த சந்தர்ப்பவாதப் போக்குகளை அம்பலப்படுத்துவதிலும் இளம் கட்சிகளாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகளை உறுதிபெறச் செய்வதிலும் சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் வகுப்பதிலும் கம்யூனிஸ்டு அகிலம் துணை புரிந்தது.

1943 மே மாதத்தில் பாட்டாளி வர்க்க சர்வதேச ஒழுங்கமைப்புக்குப் பழைய வரலாற்றுக் கட்டத்தில் பொருத்தமாக இருந்த அமைப்புவடிவம் புதிய நிலைமைகளுக்குப் பொருந்தவில்லை என்பதால் கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைப்பதென்று அதன் செயற்குழு தீர்மானித்தது.—9.

*Neue Rheinische Zeitung* (புதிய ரைன் பத்திரிகை) 1848 ஜூன் முதல் 1849 மே முடிய கொலோன் நகரிலிருந்து வெளியிடப்பட்ட செய்தித்தாள். மார்க்ஸ் இதன் ஆசிரியராகப் பணியாற்றினர்.—10.

கா. மார்க்ஸ் எழுதிய **நெருக்கடியும் எதிர்ப்புரட்சியும்** என்ற நூலைப் பார்க்கவும்.—11.

ஜெர்மனியில் 1848 மார்ச் புரட்சிக்குப் பிறகு மைன் நதிக்கரை ஃபிராங்க்பர்ட் என்ற இடத்தில் அந்த வருடம் மே மாதத்தில் கூட்டுவிக்கப்பட்ட அகில ஜெர்மன் தேசிய மாநாட்டின் கூட்டம் இங்கே குறிப்பிடப்படுகிறது. ஜெர்மனி அரசியல் ரீதியில் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டிருந்த நிலைமைக்கு முடிவு கட்டுவதும் ஜெர்மனி முழுமைக்கும் ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதும் இந்த மாநாட்டுக்கு முன்னுலிருந்த கடமைகளாகும். அதன் மிதவாதப் பெரும்பான்மையினருடைய கோழைத்தனம், ஊசலாட்டம், குட்டி முதலாளித்துவ இடதுசாரி அணியின் உறுதியில்லாத நிலை, ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத தன்மை ஆகியவற்றினுல் மாநாடு நாட்டின் தலைமையான அதிகாரத்தைக் கைப்பற்றத் துணியவில்லை, 1848-49ம் வருடங்களின் ஜெர்மானியப் புரட்சியின் பிரதான பிரச்சினைகளைப் பற்றி உறுதியான நிலையெடுக்க முடியவில்லை.

1849 ஜூன் மாதத்தில் மாநாடு கலைக்கப்பட்டது.——12.

15 கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ் எழுதிய தீவிரவாத ஜன நாயகக் கட்சி மற்றும் ஃபிராங்க்பர்ட் இடதுசாரி கோஷ்டி யின் வேலைத்திட்டங்கள்.—12.

16 1905 ஜனவரி 9ந் தேதியன்று ஜாரிடம் மனுக்கொடுப்ப தற்காகத் தொழிலாளர்கள் குளிர்கால அரண்மனைக்கு ஊர்வலமாகச் சென்றார்கள். அந்த ஊர்வலத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு ஜார் துருப்புகளுக்கு உத்தரவிட்டார். அதன் காரணமாக ஆயிரத்துக்கும் அதிக மான தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள், சுமார் ஐயாயிரம் தொழிலாளர்கள் காயமடைந்தார்கள். ''இரத்த ஞாயிறு'' என்று கூறப்பட்ட இந்த 9ந் தேதிச் சம்பவம் 1905ம் வருடப் புரட்சியின் தொடக்கமாக இருந்தது. —12.

17 காடேட்டுகள்—1905ல் அக்டோபரில் நிறுவப்பட்ட அரசி யல் சட்ட ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள். இக்கட்சி ருஷ்யாவில் மிதவாத, முடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் முதன்மையான கட்சியாக இருந்தது. காடேட்டுகள் சட்டத்துக்குட்பட்ட முடியரசைத்தான் கோரினார்கள். அவர்கள் ஜாரோடும் நிலவுடைமையாளர் களோடும் ஆட்சியதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதை விரும்பினார்கள்.—13.

18 1907ம் வருடத்தில் நடைபெற்ற அகில ருஷ்ய அரசி யல் வேலைநிறுத்தத்தின் உச்சகட்டத்தில் அக்டோபர் 17ந் தேதியன்று ஜாரின் பிரகடனம் வெளியிடப்பட்டது. அப்பிரகடனத்தில் ''அரசியல் உரிமைகள்'' வழங்கப்படு மென்றும் ''சட்டமன்ற'' டூமா ஏற்படுத்தப்படுமென்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டது. புரட்சியின் தீவிரத்துக்கு ஜார் வழங்கிய சலுகையே இந்தப் பிரகடனம். புரட்சிகர சக்திகளைப் பிளவுபடுத்துவதற்கும் அகில ருஷ்ய வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்கும் புரட்சியை நசுக்குவதற் கும் ஜாரிஸ்ட் அரசாங்கத்துக்கு அவகாசம் வேண்டியிருந்த படியால் பிரகடனம் வெளியிடப்பட்டது. ஜாரிஸ்ட் அரசி யல் தந்திரங்களை போல்ஷிவிக்குகள் அம்பலப்படுத்தினார் கள்.—14.

19 நாஷா ஷிஸின் (நமது வாழ்க்கை) என்ற தினசரிப் பத் திரிகை இங்கே குறிப்பிடப்படுகிறது. இப்பத்திரிகை, 1904 நவம்பர் முதல் 1906 ஜூன் முடிய (இடைவெளி

களோடு)] செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரத்திலிருந்து வெளியிடப்பட்டது.—15.

20 அரசாங்க டூமா—1905ம் ஆண்டின் புரட்சி நிகழ்ச்சிகளின் காரணமாக ஜார் அரசாங்கம் இப்பிரதிநிதித்துவ சபையைக் கூட்ட வேண்டியதாயிற்று. சட்டமன்றமாயிருந்த அரசாங்க டூமா மெய்யான ஆட்சியதிகாரம் எதுவும் இல்லாததாகவே இருந்து வந்தது. அரசாங்க டூமாவுக்கான தேர்தல்கள் நேரடியானவையாகவோ, சமத்துவ வாக்குரிமையுடையதாகவோ, குடிமக்கள் அனைவருக்குமானதாகவோ இருக்கவில்லை. உழைப்பாளி மக்களுக்கும் ருஷ்யாவிலிருந்த ருஷ்யரல்லாத பிற இனத்தோருக்கும் வாக்குரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தது. ஏராளமான தொழிலாளர்களும் விவசாயிகளும் வாக்குரிமையற்றோராகவே இருந்தனர்.

முதலாவது அரசாங்க டூமாவும் (1906 ஏப்ரல்-ஜூலை) இரண்டாவது அரசாங்க டூமாவும் (1907 பிப்ரவரி-ஜூன்) ஜார் அரசாங்கத்தால் கலைக்கப்பட்டன. 1907 ஜூன் 3ல் ஆட்சிக்கு வந்த ஸ்தொலீபின் அரசாங்கம் புதிய தேர்தல் சட்டத்தைப் பிறப்பித்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், நகரக் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தாரின் வாக்குரிமையை இச்சட்டம் மேலும் குறைத்தது. நிலப்பிரபுக்கள், பெரு முதலாளிகளது பிற்போக்குக் கூட்டணி இதனால் மூன்றாவது டூமாவிலும் (1907-12) நான்காவது டூமாவிலும் (1912-17) ஆதிக்கம் வகிக்க முடிந்தது.—16.

21 புலிகின் டூமா—ஜார் அரசாங்கம் ஆலோசக அந்தஸ்தைக் கொண்ட இந்த சபையை 1905 ஆகஸ்டில் கூட்ட உத்தேசித்திருந்தது. உள்துறை அமைச்சரான ஏ. ஜி. புலிகின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த குழு இதன் நகல் சட்டத்தைத் தயாரித்த காரணத்தால் இது புலிகின் டூமா என்று அழைக்கப்பட்டது. இதில் சமத்துவ வாக்குரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தது.

புலிகின் டூமாவுக்கான தேர்தல்கள் நடைபெறவில்லை. 1905ம் வருடப் புரட்சியும் அக்டோபரில் நடைபெற்ற அரசியல் வேலைநிறுத்தமும் இதற்குக் காரணமாகும்.—17.

22 குறிப்பு 18ஐப் பார்க்கவும்.—17.

பிரென்டானோயிசம்—முதலாளித்துவ அமைப்பின் கீழ் தொழிற்சாலைச் சட்டங்கள் மற்றும் சீர்திருத்தவாதத்

தொழிற்சங்கங்கள் மூலமாகத் தொழிலாளர் பிரச்சினை களைத் தீர்க்க முடியும் என்று கருதும் முதலாளித்துவ மிதவாதப் போக்கு. மூனிக் பல்கலைக்கழகத்தில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியராக இருந்த எல். பிரென்டானோ என்பவர் இந்தக் கொள்கையைக் கூறினார். இவர் கத்தேடெர் சோஷலிசத்தின் முக்கியமான பிரதிநிதிகளில் ஒருவர்.—28.

24 தலைப்பில்லாத—1906ம் வருடத்தில் செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கிலிருந்து வெளியிடப்பட்ட அரசியல் வார இதழ். பாதி காடேட்டுகளாகவும் பாதி மென்ஷிவிக்குகளாகவும் இருந்த ருஷ்ய முதலாளித்துவ அறிவுஜீவிகளின் கோஷ்டி இந்தப் பத்திரிகையை நடத்தி வந்தது. இவர்கள் எந்தக் கட்சியையும் ஆதரிக்காதது போல நடித்துக் கொண்டு முதலாளித்துவ மிதவாத மற்றும் சந்தர்ப்பவாதக் கருத்துக்களைப் பரப்பி வந்தார்கள். ருஷ்யாவிலும் சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்திலும் திருத்தல்வாதிகளை ஆதரித்தார்கள்.—28.

25 பெர்ன்ஷ்டைன்வாதிகள் — பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசியில் ஜெர்மனியிலும் சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்திலும் தோன்றிய சந்தர்ப்பவாதப் போக்கு பெர்ன்ஷ்டைன்வாதம் எனப்படும். ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி எடுவார்டு பெர்ன்ஷ்டைன் பெயரில் இவ்வாறு அழைக்கப்பட்டது. அதன் ஆதரவாளர்கள் பெர்ன்ஷ்டைன்வாதிகள் எனப்பட்டனர்.

1896—1898ம் வருடங்களில் ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தின் தத்துவார்த்த மாத இதழான *Die Neue Zeit* என்ற பத்திரிகையில் பெர்ன்ஷ்டைன் சோஷலிசத்தின் பிரச்சினைகள் என்ற தலைப்பில் சில கட்டுரைகளை எழுதினார். புரட்சிகரமான மார்க்சியத்தின் தத்துவஞான, பொருளாதார மற்றும் அரசியல் அடிப்படைகளைத் திருத்தி அவற்றுக்குப் பதிலாக வர்க்கங்களின் பகைநிலையை சமரசப்படுத்துதல், வர்க்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு என்ற முதலாளித்துவத் தத்துவங்களை நுழைப்பதற்கு அவர் முயற்சி செய்தார். ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தின் வலதுசாரி அணியும் இரண்டாவது அகிலத்தின் மற்ற கட்சிகளிலிருந்த சந்தர்ப்பவாத சக்திகளும் பெர்ன்ஷ்டைனுடைய கருத்துக்களை ஆதரித்தன.—28.

26 நெறிபிசகாதவர்கள் — மார்க்சியத்தைத் திருத்துவதை எதிர்த்த ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள்.—29.

27 1885 மார்ச்சில் ஜெர்மன் நாடாளுமன்றத்தில் (ரைஹ்ஸ்டாக்) கப்பல் தொழிலுக்கு நிதியுதவி செய்வதைப் பற்றி சமூக-ஜனநாயகவாதக் கோஷ்டியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை லெனின் இங்கே குறிப்பிடுகிறார்.—32.

28 ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் ''இளைஞர்'' கோஷ்டி எனப்படுவது 1890ம் வருடத்தில் உருவான குட்டி முதலாளித்துவ, பாதி அராஜகவாத எதிர்க் கட்சியாகும். இந்த கோஷ்டியில் இளம் எழுத்தாளர்களும் மாணவர்களும் (அதனுல்தான் இந்தப் பெயர் ஏற்பட்டது) மையமாக இருந்தனர்; இவர்கள் கட்சியின் தத்துவாசிரியர்களாக, தலைவர்களாக இருக்க விரும்பினார்கள். 1878ல் சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டம் ரத்துச் செய்யப்பட்ட பிறகு ஏற்பட்ட மாற்றங்களை இவர்கள் பார்க்கத் தவறினார்கள். கட்சி சட்டபூர்வமான போராட்ட வடிவங்களைப் பயன்படுத்துவதன் அவசியத்தை இவர்கள் மறுத்தார்கள்; சமூக-ஜனநாயகவாதிகள் நாடாளுமன்றத்தில் பங்கு கொள்வதை எதிர்த்தார்கள்; கட்சி சந்தர்ப்பவாதத்தைப் பின்பற்றுகிறது, குட்டி முதலாளித்துவ வர்க்கத்தை ஆதரிக்கிறது என்று குற்றம் சாட்டினார்கள். 1891 அக்டோபரில் எர்புர்ட்டில் நடைபெற்ற காங்கிரசில் ''இடதுசாரி'' எதிர்த்தரப்பின் தலைவர்கள் சிலர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.—32.

29 ஸெவெர்னி கோலொஸ் (வடதிசைக் குரல்)—1905 டிசம்பர் 6 (19)ம் தேதியிலிருந்து செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலிருந்து ரு. ச. ஜ. தொ. கட்சி வெளியிட்ட சட்டபூர்வமான நாளிதழ். நோவயா ஷிஸின் (புதிய வாழ்க்கை) மற்றும் நச்சாலோ (தொடக்கம்) ஆகிய நாளிதழ்களை அரசாங்கம் தடை செய்த பிறகு இப்பத்திரிகையை போல்ஷிவிக்குகளும் மென்ஷிவிக்குகளும் கூட்டாக வெளியிட்டார்கள். இதன் மூன்ருவது இதழ் வெளிவந்ததும் அரசாங்கம் இப்பத்திரிகையைத் தடைசெய்தது.—33.

30 நச்சாலோ (தொடக்கம்)—1905 நவம்பர் முதல் டிசம்பர் முடிய செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலிருந்து வெளிவந்த சட்டபூர்வமான நாளிதழ். மென்ஷிவிக்குகள் இப்பத்திரிகையை நடத்தினார்கள். மொத்தம் பதினுறு இதழ்கள் வெளியிடப்பட்டன.—34.

31 நோவயா ஷிஸின் (புதிய வாழ்க்கை)—1905 அக்டோபர் முதல் டிசம்பர் முடிய செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து

சட்டபூர்வமாக வெளியிடப்பட்ட முதல் போல்ஷிவிக் நாளிதழ். உண்மையில் இது ரு. ச. ஜ. தொ. கட்சியின் அதிகாரபூர்வமான மத்திய நாளிதழாக இருந்தது.—34.

32 போலியார்னயா ஸ்வெஸ்தா (துருவ நட்சத்திரம்)—காடேட் கட்சியின் வலதுசாரி அணியின் கருத்துக்களை வெளியிட்ட வார இதழ். 1905 டிசம்பர்—1906 மார்ச்முடிய செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலிருந்து வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியர் பி. பி. ஸ்துரூவே. மொத்தம் பதினன்கு இதழ்கள் வெளியிடப்பட்டன.—35.

# பெயர்க் குறிப்புகள்

அவ்ராமொவ், பி. ஃபி. *(1875-1905)*—*கஸாக் படையைச் சேர்ந்த அதிகாரி; 1905ல் டம்போவ் குபெர்னியா வில் விவசாயிகளின் இயக்கத்தை ஜாரின் துருப்புகள் நசுக்கிய பொழுது மிகவும் அதிகமான கொடுமை களைச் செய்தவர்; சோஷலிஸ்டு-புரட்சியாளர்களால் கொல்லப்பட்டார்.—23, 24, 26, 27, 28.*

காம்ப்ஹாவுஸன் [Camphausen], லுதோல்ஃப் *(1803-1890)—பிரஷ்ய அரசாங்கப் பிரமுகர்; ரைன் பகுதியைச் சேர்ந்த முதலாளித்துவ மிதவாதிகளின் தலைவர்களில் ஒருவர்; 1848 மார்ச்-ஜூன் மாதங்களில் பிரஷ்ய முத லாளித்துவ மிதவாத அரசாங்கத்துக்குத் தலைமை தாங்கினர்.—11.*

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் *(1854-1938)—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். முதலில் மார்க்சியவாதியாக இருந்தார், பிறகு மார்க்சியத்தைக் கைவிட்டு மிகவும் தீங்கான சந்தர்ப்பவாதத்தன்மை கொண்ட ''மைய வாதத்தின்'' (காவுத்ஸ்கிவாதத்தின்) சித்தாந்தியாஞர். —37.*

கிஸெவெட்டர், அலெக்சாந்தர் அலெக்சாந்தரவிச் *(1866-1933)—ருஷ்ய மிதவாத வரலாற்றுசிரியர், கட்டுரையாளர்; காடேட் கட்சியின் தலைவர்களில் ஒருவர்.—20, 21, 22, 23, 24, 27.*

கிரிஸ்பின் [Crispien], அர்த்தூர் *(1875-1946)—ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர், பத்திரிகையாளர். 1917-1922ல் ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரிப் பிரிவின் தலைவராக இருந்தார்.—37.*

குஸ்கோவா, எக்கதெரீனு திமீத்ரியெவ்னு *(1869-1958)*— *ருஷ்ய முதலாளித்துவப் பிரமுகர், பத்திரிகையாளர்; பெர்ன்ஷ்டைன் நிலையை அடிப்படையாகக் கொண்டு மார்க்சியத்தைத் திருத்துவதற்கு முயற்சி செய்தவர். 1906ம் வருடத்தில் புரோக்கபோவிச் என்பவரோடு சேர்ந்து தலைப்பில்லாத என்ற பாதி காடேட், பாதி மென்ஷிவிக் இதழை நடத்திஞர்; சோவியத் ஆட்சியதி காரத்துக்கு எதிராகப் போராடியவர்.—28.*

டிட்மன் [Dittmann], வில்ஹெல்ம் *(1874-1954)*—*ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர், கட்டுரையாளர்; 1917-1922ம் வருடங்களில் ஜெர்மனி யின் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரி அணியின் தலைவர்களில் ஒருவர். மத்திய நிலையைக் கடைப்பிடித்தவர்.—37.*

டுபாஸொவ், ஃபியோதர் வசீலியெவிச் *(1845-1912)*— *ஜாரிஸ்ட் தளபதி, பிற்போக்கான கருத்துக்கள் உடைய வர். 1905ல் மாஸ்கோவின் கவர்னர் ஜெனரலாக இருந்தார்; டிசம்பரில் ஏற்பட்ட ஆயுதந்தாங்கிய எழுச்சியை நசுக்கியவர். ருஷ்யாவில் சில குபெர்னியாக் களில் விவசாயிகளின் இயக்கத்தை நசுக்குவதில் முக்கிய மான பங்கு கொண்டவர். 1906 முதல் அரசு கவுன்சிலில் உறுப்பினராக இருந்தார்.—14, 27, 31, 34, 35.*

டுராட்டி [Turati], ஃபிலீப்போ *(1857-1932)*—*இத்தாலியத் தொழிலாளர் இயக்கத்தின் சீர்திருத்தவாதத் தலைவர் களில் ஒருவர்; இத்தாலிய சோஷலிஸ்ட் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர். அதன் வலதுசாரி சீர்திருத்த வாத அணியின் தலைவர். முதல் உலகப் போரின் போது மத்திய நிலையைக் கடைப்பிடித்தவர். 1922ல் இத்தாலிய சோஷலிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்ட பிறகு சீர்திருத்தவாத யூனிட்டரி சோஷலிஸ்ட் கட்சி யின் தலைவராக இருந்தார்.—9, 37.*

டுர்னேவோ, பியோத்தர் நிக்கலாயெவிச் *(1844-1915)*— *ஜாரிஸ்ட் ருஷ்யாவின் மிகவும் பிற்போக்கான அரசி யல் பிரமுகர். 1905ல் அக்டோபரில் உள்நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். முதல் ருஷ்யப் புரட்சியை நசுக்குவதற்குத் தீவிரமான நடவடிக்கை களை மேற்கொண்டார். யூதர்களைக் கொலை செய்யு மாறு கறுப்பு நூற்றுவர்களைத் தூண்டியவர். 1906 முதல் அரசு கவுன்சிலின் உறுப்பினர்.—27.*

டூரிங் [Dühring], ஓய்கென் *(1833-1921)*—*ஜெர்மன் தத்துவ ஞானி, பொருளியலாளர். அவருடைய தத்துவஞானக் கருத்துக்கள் கருத்துமுதல்வாதமும் நேர்க்காட்சிவாதமும் இயக்க மறுப்பியல் பொருள்முதல்வாதமும் கொண்ட கதம்பக் கூட்டாக இருந்தன.—32.*

பிளாங்கு, ருஸீம் மார்கவிச் *(பிறப்பு 1866)—ருஷ்ய அரசியல் கட்டுரையாளர், காடேட் கட்சியின் இடதுசாரி அணியில் சேர்ந்தார்.* நாஷா ஷிஸின் *என்ற பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் உறுப்பினராஞர்; பிறகு அதன் ஆசிரியராஞர்.—15, 16, 17, 20, 21, 22, 23, 24, 28, 29, 31, 32, 34, 35, 37.*

பிளெஹானவ், இயோர்கி வலென்தீனவிச் *(1856-1918)*—*ருஷ்ய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலை சிறந்த பிரதிநிதி, ருஷ்யாவில் முதன்முதலாக மார்க்சியத்தைப் பரப்பியவர். ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு சந்தர்ப்பவாதிகளோடு சமரச நிலையைப் பின்பற்றிஞர்; பிறகு மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து கொண்டார். முதலாவது உலகப் போரின் போது (1914-1918) சமூக தேசியவெறியராக இருந்தார்.*

*1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு போல்ஷிவிக்குகளையும் சோஷலிஸ்ட் புரட்சியையும் எதிர்த்தார். சோஷலிசத்துக்கு மாறுவதற்கு ருஷ்யா இன்னும் தயாராகவில்லை என்று கருதிஞர். அவர் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றி எதிர்மறையான அணுகுமுறையைக் கடைப்பிடித்தார்; ஆஞல் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.—3, 28, 29.*

புரோக்கபோவிச், செர்கேய் நிக்கலாயெவிச் *(1871-1955)*—*ருஷ்யப் பொருளியலாளர், அரசியல் கட்டுரையாளர்; பெர்ன்ஷ்டைன்வாதத்தை ருஷ்யாவில் முதன் முதலாகப் பரப்பியவர்களில் ஒருவர். 1906ல் காடேட் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினராக இருந்தார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு ஏற்பட்ட தற்காலிக அரசாங்கத்தில் உறுப்பினராக இருந்தார்.—28.*

பெர்ன்ஷ்டைன் [Bernstein], எடுவார்டு *(1850-1932)*—*ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்திலும் இரண்டாம் அகிலத்திலும் தீவிர சந்தர்ப்பவாத அணியின் தலைவர்,*

*திருத்தல்வாதம் மற்றும் சீர்திருத்தவாதத்தின் தத்துவாசிரியர்.—4, 32.*

மாக்டொனுல்டு [MacDonald], ஜேம்ஸ் ராம்ஸே *(1866-1937)—இங்கிலாந்தில் சுயேச்சைத் தொழிலாளர் கட்சி, தொழிற் கட்சி ஆகியவற்றை நிறுவியவர்களில் ஒருவர், தீவிர சந்தர்ப்பவாதி; 1924 மற்றும் 1929-1931ம் வருடங்களில் பிரதம மந்திரி பதவி வகித்தார். இவர் வர்க்க ஒத்துழைப்பையும் முதலாளித்துவம் படிப்படியாக சோஷலிசமாக மாற்றமடையும் என்ற தத்துவத்தையும் பரப்பினுர்.—37.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818-1883)—9, 10, 11, 12.*

மின், கியோர்கி அலெக்சாந்தரவிச் *(1855-1906)—ஜாரிஸ்ட் இராணுவத்தில் கர்னல் பதவி வகித்தவர். 1905 டிசம்பரில் மாஸ்கோவில் ஏற்பட்ட ஆயுதந்தாங்கிய எழுச்சியை மிகவும் குரூரமாக ஒடுக்கியவர். இதற்காக ஜார் அவருக்கு மேஜர்-ஜெனரலாகப் பதவி உயர்வு கொடுத்தார்; ஒரு சோஷலிஸ்டு-புரட்சியாளரினுல் கொல்லப்பட்டார்.—27.*

முல்பெர்கெர் [Mülberger], அர்த்தூர் *(1847-1907)—ஜெர்மன் அரசியல் கட்டுரையாளர்; பிரான்சிலும் ஜெர்மனியிலும் சமூக சிந்தனை வளர்ச்சியின் வரலாற்றைப் பற்றி சில நூல்களை எழுதினுர். மார்க்சியத்தை விமர்சனம் செய்தார்.—32.*

மெரிங் [Mehring], ஃபிரான்ஸ் *(1846-1919)—ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த பிரமுகர்; ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரி அணியின் தலைவர்களில், தத்துவாசிரியர்களில் ஒருவராக இருந்தவர். இலக்கியம், வரலாறு ஆகிய துறைகளில் பல நூல்களை எழுதியவர் அரசியல் கட்டுரையாளர்; ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவியதில் சிறப்பான பங்கு வகித்தவர்.—10, 11.*

லுக்சம்பர்க் [Luxemburg], ரோஸா *(1871-1919)—சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் சிறப்பு மிக்க தலைவர்களில் ஒருவர்; இரண்டாவது அகிலத்தின் இடதுசாரி அணியின் தலைவர்களில் ஒருவராகவும் இருந்தார். போலிஷ் சமூக-ஜனநாயகக் கட்சியை நிறுவி வழிகாட்டிய தலைவர்களில் ஒருவர்; ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தில் முக்கியமான பாத்திரம் வகித்தார். ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவியவர்களில்*

ஒருவர். *1919 ஜனவரியில் எதிர்ப்புரட்சியாளர்களால் குரூரமாகக் கொலை செய்யப்பட்டார்.—6.*

லெனின், விளதீமிர் இலியீச் *(1870-1924)—10.*

லொங்கே [Longuet], மூான் *(1876-1938)—பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சி மற்றும் இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர், மத்திய நிலையைப் பின்பற்றியவர்; 1923 முதல் சோஷலிஸ்ட் தொழிலாளர் அகிலம் என்று சொல்லப்பட்ட அமைப்பின் தலைவராக இருந்தார்.—6, 37.*

ஸ்துருவே, பியோத்தர் பெர்ங்கார்தவிச் *(1870-1944)—ருஷ்யப் பொருளியலாளர், அரசியல் கட்டுரையாளர். 1890க்களில் ''சட்டபூர்வமான மார்க்சியம்'' என்ற போக்கின் முக்கியமான பிரதிநிதி; மார்க்சின் பொருளாதார மற்றும் தத்துவஞான நூல்களுக்கு ''விமர்சனமும்'' ''இணைப்புக்களும்'' எழுதியவர்; முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கேற்ற வகையில் மார்க்சியத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் மாற்றியமைக்க முயற்சி செய்தார். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்தார்; சோவியத் ருஷ்யாவை விட்டுச் சென்று வெளிநாடுகளில் வாழ்ந்தார்.—17, 35.*

ஸ்பிரிடோனவா, மரீயா அலெக்சாந்தரவ்ஞ *(1884-1941)—குட்டி முதலாளித்துவ சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1906ல் டம்போவ் குபெர்னியாவில் கொலைகளைச் செய்த கறுப்பு நூற்றுவர்களின் தலைவரான லுழெனேவ்ஸ்கியைக் கொல்ல முயற்சி செய்ததற்காக கடுஞ்சிறைக்கு அனுப்புமாறு தண்டிக்கப்பட்டார்.—23, 24, 26, 27, 28.*

ஸ்னோடென் [Snowden], ஃபிலிப் *(1864-1937)—ஆங்கில அரசியல்வாதி; 1903-1906 மற்றும் 1917-1920ம் வருடங்களில் சுயேச்சைத் தொழிலாளர் கட்சியின் தலைவர், அதன் வலதுசாரி அணியைப் பிரதிநிதித்துவப் படுத்தியவர்; முதல் உலகப் போரின் போது மத்திய நிலையைப் பின்பற்றியவர்.—37.*

ஹில்குவிட் [Hillquit], மோரிஸ் *(1869-1933)—அமெரிக்க சோஷலிஸ்ட், சீர்திருத்தவாதத்தைப் பின்பற்றிய அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சியை நிறுவியவர்களில்*



5 MAR ...

ஒருவர் (1901). 1904 முதல் சர்வதேச சோஷலிஸ்ட் குழுவில் பங்கெடுத்தார்.—6.

ஹில்பெர்டிங் [Hilferding], ருடோல்ஃப் (1877-1941)—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியிலும் இரண்டாவது அகிலத்திலும் சந்தர்ப்பவாத நிலையைப் பின்பற்றிய தலைவர்களில் ஒருவர். 1917 முதல் ஜெர்மனியின் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்தார்.—37.

LIBRARY
-6 ... 1935
MADRAS

-5 MADRAS

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தையும் அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு வரவேற்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**விற்பனையாளர்கள்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

*41.பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*
*சென்னை—600098.*

**ஷோ-ரூம்**

*136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.*

**கிளைகள்**

*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.*
*87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.*
*சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.*
*செர்ரி ரோடு, சேலம்—636001.*

**விற்பனை நிலையங்கள்**

*3-22-75-D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன்.*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.*

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

**В. И. Ленин**

К ИСТОРИИ ВОПРОСА О ДИКТАТУРЕ

*на тамильском языке*

**V. I. Lenin**

A CONTRIBUTION TO THE HISTORY
OF THE QUESTION OF THE DICTATORSHIP

*in Tamil*